உ

கடவுள் துணை

# செந்தமிழ்.

தொகுதி உங.] குரோதன ௵ ஆனிமீ [பகுதி அ.

Vol. XXIII. June-July-1925. No. 8.

## பிரும்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய
## சாமிநாதையரவர்கட்குப்
## பொற்கிழியுதவிய புகழுரை.

"வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்பட ரொழுக்கமுந்
திங்க ளன்ன கல்வியுந் திங்களொடு
ஞாயி றன்ன வாய்மையும் யாவது
மஃகா வன்பும் வெஃகா வுள்ளமுந்
துலைநா வன்ன சமனிலை யுளப்பட
வெண்வகை யுறப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையுந் தாஅ ளாண்மையு
முலகிய லறிதலு நிலைஇய தோற்றமும்
பொறையு நிறையும் பொச்சாப் பின்மையு
மறிவு முருவு மாற்றலும் புகழுஞ்
சொற்பொரு ளுணர்த்துஞ் சொல்வன்மையுங்
கற்போர் நெஞ்சங் காமுறப் படுதலு
மின்னோ ரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பி னல்லா சிரியர்"

எனக் கூறிய நல்லாசிரியர் குணங்க ளமைந்து, நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என்னும் மூவகையாசிரியரு மோருருக்கொண்டுவந்தாற்போல உத்தமதானபுரத்தி லவதரித்துக் கனந்தங்கிய சக்கரவர்த்தியவர்களாலே மகாமகோபாத்தியாயர் என்னும் பட்டப்பெயர் தரப்பெற்ற சாமிநாதையரவர்கள், இவ்வுலகிற் குபகாரமாகப் பண்டுள்ள பல தமிழ் நூல்களை யாராய்ச்சிசெய்து வெளியிட்ட பெருங்கருணைத்திறத்தை அறியாதவர்க ளறியாதவர்களே; அறிந்தவர்க ளறிந்தவர்களேயாவர்.

இத்தகைய புண்ணியதவபலம்வாய்ந்த ஐயரவர்களுக்குத் தமிழ் வித்துவான்களெல்லாரும் மெச்சி நன்றிபாராட்டிப் புகழுரைவாழ்த்து வழங்கிவருவதுபோதுமோ?

இதையறிந்து, தமிழுக்கும், தமிழ்ப்புலவர்களுக்குந் தம்மாலியன்றவுதவிபுரிந்துபகரித்துவருவதையே முதன்மையாகக்கொண்டவரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியும், ஹைக்கோர்ட்டுவக்கீலுமான ஸ்ரீமத். டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், ஐயரவர்களுக்கு ஒரு பெரும்பரிசளிக்கக்கருதித் தமிழபிமானச்செல்வர்கள்பலரிடம் சொல்லித் தாமும் அவர்களும் சேர்ந்து உபகரித்த ரூபா ஐயாயிரம் வரை சேரத்தொகுத்து மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபத்துநான்காம் வருடக் கொண்டாட்டத்தின் மஹாஸபையில் அக்கிராஸனர் ஆனரபிள் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் கே. ஸி. ஐ. இ., அவர்கள்திருக்கரத்தால் அளித்தருளச்செய்தார்கள். இவ்வண்மையாளர்கள்செய்த இவ்வுதவியை உலகமெல்லாம் பாராட்டுகின்றது. யானொருவனோ பாராட்ட வல்லேன். இவர்கள் இவ்வாறே இன்னும் பலபுலவர்களையும் ஆதரித்து நீடூழிவாழ எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவானாக.

தானமென்பது மூவகைப்படும்; அவை: உத்தமம், மத்திமம் அதம மென்பனவாம்.

அதமதானமாகிய கடைப்படிதானம் கண்ணோட்டம், அச்சம், புகழ், கைம்மாறு முதலியகாரணம்பற்றி வழங்குவதாம்; மத்திமதானம் வறுமையுற்றோர், உறுப்பறைகள், அந்தகர்முதலோர்க்கு வழங்குவதாம்; அறத்தா றீட்டியபொருளை முக்குற்றநீங்கிய புண்ணியதவத்தினர்க்குக் குறையிரந்துகொள்கவென்று வழங்குவது உத்தமதானமாம்,

இம்மூவகைத் தானத்தி லிங்கே வழங்கியது பெருந்தானமாகிய வுத்தமதானமாம். உத்தமதானமுரியவர்களுக்கே யுத்தமதானஞ்செய் தார்களென்னலாம்.

இவ்வுத்தமதானமாகச்செய்த பொற்கிழி, முன்னாட் சிவபிரான் வழங்கிய பொற்கிழியினுஞ் சிறந்த தென்னலாம்; எவ்வாறெனில், பூலோகசிவலோகமாகிய மதுரையம்பதியிலே குலபூடணபாண்டியனுக்கு ஓர் பொற்கிழி கொடுத்ததுண்டு; அதுவும் மழையின்றி விளைவின்றி வருந்தியபோது அவ்வருத்தநீங்க வேண்டிக்கொள்ளக் கொடுத்ததாம். தருமி யென்னு மாதிசைவனுக்கு மோர் பொற்கிழி கொடுத்ததுண்டு; அதுவு மவன் மணஞ்செய்யுநிமித்தமாக வேண்டிக்கொள்ளச் சங்கத்தில் விவாதந்தீர்த்து வாங்கிக்கொடுத்ததாம். திருவாவடுதுறையிலே திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக் கொரு பொற்கிழி கொடுத்ததுண்டு. அதுவும், அந்நாயனார் பிதா யாகஞ்செய்யுநிமித்தமாகப் பொருள்வேண்டு மென்று திருப்பதிகம்பாடி வேண்டிக்கொள்ளக் கொடுத்ததாம். இப் பொற்கிழியோ முக்குற்றமுமில்லாத புண்ணியதவத்தினரை வேண்டிக் கொடுப்பதாகிய வுத்தமதானமாகக் கொடுத்ததனாற் சிறந்ததேயாகும்.

இது பொற்கிழியாயினும், ஐயாவர்கள் சங்கநிதியாகக் கொள்ளத் தகுமென்று சங்கத்தார் கருதுகின்றார்கள்.

இன்னும், இத்தமிழுலகிலுள்ள தமிழ்வித்துவான்களெல்லாம்,

"தக்கவ னொருவனை வாழத் தன்கிளை வாழ்வ தென்ன
மிக்கவ ரெடுத்துக் கூறும் பழமொழி விளக்கிற் றன்றே"

எனக் கூறிய செய்யுளின் ஹற்பரியப்படி தாங்களெல்லாரும் பெற்றதாக மகிழ்ச்சியுறுகின்றார்கள்.

இனி, இவ்வையாவர்கள்,

"அறிவும் வாய்மையுந் தூய்மையு மன்புமின் னருளும்
பொறையு ஞானமுங் கல்வியும் புரிபெருந் தவமு
நெறியு மானமும் வீரமு நின்னவா தலினாற்
பெறவு னக்கரி தாயதே தென்றனன் பெரியோன்"

எனக் கூறிய செய்யுளின் கூற்றுப்படி நன்மைக் குணங்களெல்லாம் பெற்றிருப்பதனு லிதனினுஞ்சிறந்ததானவரிசைபெறத்தக்கவர்களென் பதற் கையமில்லை; நந் தமிழ்நாட்டு மூவேந்தரு மில்லையே!

“பெற்றா னிலைப்பெற் றவர்போற் பெறலும் பிறப்பதுண்டேல்
நற்றா ரணியி னிலைப்போற் பிறப்பது நல்லகண்டாய்
செற்றார் புரமெரி செய்தவில் வீரன் றிருப்பெயரே
பற்றா மறிவெண் டிரைக்கட னீந்திய பாவலனே”

எனக் கூறிய செய்யுளின் கூற்றுப்படி பிள்ளைபெற்றா லிப் புண்ணிய தவத்தினரைப் பெற்றவர்களைப்போலப் பெறவேண்டும்; பிறந்தா லிவர் களைப்போலப் பிறக்கவேண்டும்.

இத்தகைய புண்ணியதவத்தினர் முற்செய்த வுபகாரம்போலப் பல்லாண்டிருந் துலகிற்குபகாரஞ்செய்து வாழும்வண்ணங் கூடற்பெருமா னருள்புரியும்படி தமிழறிவபிமானமுள்ளவர்க ளெல்லாரும் பிரார்த்திக் கின்றார்கள்.

வித்தகரா சாங்கத்தார் மெச்சியுரை பட்டப்பேர் விளங்கப் பெற்றாய்
புத்தகங்க ளாய்ந்துலகிற் குபகரித்தாய் சங்கநிதி பொருந்தக் கொண்டா
யுத்தமதா னத்துவந்தா யுயர்சாமி நாதவள்ளா லுலகம் போற்ற
வித்தகைப்பே றெய்தவென்ன புண்ணியஞ்செய் தாயதுசொல் லெம்ம
[னோர்க்கே.

(சொன்னா லெம்மனோரு மதுசெய்வேம்; என்பது குறிப்பெச்சம்.)

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

ஸ்ரீ:

# *கருணாகரத்தொண்டைமான்.

[மு. இராகவையங்கார் எழுதியது.]

இப்பெயர்பெற்ற தலைவனைப்பற்றி முதன்முதலாக நமக்குத் தெரிவித்தவர், சயங்கொண்டார் என்ற புலவர்பெருமானென்றே சொல்லலாம். யாவரும் அருமைபாராட்டும்படி இவர் இயற்றிய கலிங்கத்துப்பரணியால் இத்தலைவனது வரலாறுகளுள் ஒருசில நமக்குத் தெரியவருகின்றன. இவற்றுடன் சாஸனங்களினின்று புதியவாக யான் கண்ட செய்திகளையும், சரித்திரவறிஞர் இவனைப்பற்றி எழுதியுள்ளவற்றைப் பரிசீலனைசெய்ததில் ஏற்பட்ட என முடிபுகளையும் ஒருங்குதிரட்டி, இப்போது இம்மகாசபைமுன் வெளியிட எண்ணுகின்றேன். செந்தமிழறிஞர் செவிசாய்த்துக் கேட்டருள்க.

சோழஸாம்ராஜ்யத்தை உயர்நிலையில் நிறுவிய அரசர்களுள்ளே, முதற்குலோத்துங்கன் எனப்பட்ட அபயன் என்பவனும் ஒருவன் என்பது சரித்திரநூலோர் அறிந்த விஷயம். நாற்பத்தெட்டு வருஷகாலம் (கி. பி. 1070—1118) ஆட்சிபுரிந்த இவ்வேந்தன் அடைந்த பெரும்புகழ்க்குச் சிறந்தகாரணமாயிருந்தோர், இவனகீழமர்ந்த தானைத்தலைவர்களேயாவர். இத்தலைவர்க்கெல்லாம் முதன்மைபெற்ற மகாசாமந்தன் கருணாகரன் என்ற சிற்றரசன். கலிங்கப்போரை நேரிற்சென்று நடத்தித் தன்னரசனான அபயனுக்கு வாகைமாலைசூட்டியவன் இத்தலைவனே. அதனால், ஏவுதற்கருத்தனான அபயனுடன் இயற்றுதற்கருத்தனாகிய இக்கருணாகரனையும் சயங்கொண்டார் தம் பரணியிலே பெரிதுஞ் சிறப்பித்துப்பாடுவர்:—

"தண்ணார் மலர்சேர் திரடோ ளபயன்
தானேவிய சேனைத னக்கடையக்
கண்ணாகிய சோழன சக்கிரமாங்
கருணாகரன் வாரண மேற்கொளவே." (350)

---

*இவ்வியாசம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 24-வது வருஷக்கூட்டத்தின் இரண்டாநாளில், ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமாந்: ரா. இராகவையங்காரவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க்கூடிய வித்துவசமூகத்தின்முன்பு படிக்கப்பெற்றது.

"அலகில் செருமுதிர் போதில் வண்டைய
ராச னரசர்க ளுதன் மந்திரி
உலகு புகழ்கரு ணுக ரன்றனை
தொருகை யிருபணை வேழ முந்தவே." (430)

"காட்டிய வேழ வணிவாரிக்
கலிங்கப் பரணிநங் காவலனைச்
சூட்டிய தோன்றலைப் பாடீரே
தொண்டையர் வேந்தனைப் பாடீரே." (522)

இக் கருணாகரன் வண்டை என்ற ஊரின் தலைவனென்பதும், பல்லவவமிசத்தவனுய்த் தொண்டைமான் என்ற சிறப்புப்பெயர்பெற்ற வன் என்பதும், அபயனது சேனைபத்தியத்துடன் மந்திரத்தலைவனாக வும் விளங்கியவன் என்பதும்—

"வண்டை வளம்பதி பாடீரே...பல்லவர்தோன்றலைப் பாடீரே."(520)

"மறைமொழிந்தபதி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ராசனே" (328)

"வண்டைமன், தொண்டை மான்முதன் மந்திர பாலகர்
சூழ்ந்து தன்கழல் சூடி யிருக்கவே." (314)

என வரும் பரணித்தொடர்களால் அறியலாம். தொண்டைமண்டலசதக நூலார், இவனைத் தொண்டைநாட்டினனாக அடியில்வருமாறு பாடுவர்:—

"பண்டையொர் நாளையி லோரேழ் கலிங்கப் பரணிகொண்டு
செண்டையு மேருவிற் றீட்டுவித் தோன்கழற் செம்பியன்சேய்
தொண்டைநன் னாடு புரக்கின்ற கோனந்தி தோன்றலெங்கள்
வண்டையர் கோனங் கருணா கரன்றொண்டை மண்டலமே. (92)

கருணாகரனுக்குரிய இவ்வண்டை, தொண்டைநாட்டிலுள்ள **வண்டலூர்*** ஆகும் என்று சரித்திரநூலோர் கருதுவர்†. இங்ஙனங் கருதற்குக்காரணம், இத்தலைவன் பல்லவமரபினனுய்த் தொண்டைமான்

---

*இவ்வூர், சென்னைக்கும் செங்கற்பட்டுக்கும் இடையில் ரயில்பாதையி லுள்ளது.

†காலஞ்சென்ற ஸ்ரீ. வி. கனகசபைப்பிள்ளையவர்கள், டாக்டர். ஹுல்ஷ் (Dr. Hultzsch) முதலியோர் இங்ஙனங் கருதினர் (S. I. I. ii, 113 footnote.).

என்ற சிறப்புப்பெயர்பெற்றிருப்பதும், தொண்டைநாட்டினனாக அதன் சதகத்திற் பாடப்பட்டிருப்பதுமேயாகும். ஆயின், இம்முடிபு உண்மையுடையதன்றென்பது, ஆராய்ச்சியால் இப்போது புதியதாகத் தெரிய வருகிறது.

மத்தியகாலத்துச் சோழர்நாளிலே, பல்லவவேந்தர் தம் பழைய பெருவலிமைகுன்றி, அச்சோழரின்கீழ் அமைச்சராகவும் படைத்தலைவராகவும் அதிகாரிகளாகவும் அமர்ந்ததோடு, தொண்டைநாட்டின்மட்டுமன்றிச் சோணாட்டிலும் பிறவிடங்களிலும் சிறியவும் பெரியவுமான ஊர்கட்குத் தலைவர்களாகவும் இருந்தவரென்பது சாஸனங்களால் நன்கறியலாம். அவ்வாறமர்ந்த பல்லவவமிசத்தவருள் இக்கருணாகரனும் ஒருவன். இவன் முன்னோர் தொண்டைநாடாண்டமைபற்றி, அவர் நாடு ஊர்களையும் செய்திகளையும் புலவர்கள் இவனுக்கும் உரியவாகச் சிறப்பிப்பாராயினும், உண்மையில் இவன் சோணாட்டவனே. இவனூராகிய வண்டையென்பதும், இதுவரை கருதப்பட்டதுபோல் தொண்டைநாட்டிலுள்ள வண்டலூரன்றிச் சோழநாட்டிலுள்ளதோர் ஊரேயாகும். இவ்வுண்மைகளை அடியில்வரும் சாஸனம் நன்குவிளக்குதல் அறியத்தக்கது:—

"ஸ்வஸ்திஸ்ரீ. கோ இராஜகேசரிவன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு நாற்பத்துமூன்று. ஜயங்கொண்டசோழமண்டலத்து எயிற்கோட்டத்து எயில்நாட்டுத் திருவத்தியூராழ்வார்க்குச் சோழமண்டலத்துக் குலோத்துங்கசோழவளநாட்டுத் திருநறையூர்நாட்டு வண்டாழஞ்சேரியுடையான் வேளான் கருணாகரனான தொண்டைமானார் தேவியார் அழகியமணவாளனி மண்டையாழ்வார் வைத்த திருநுந்தாவிளக்கு" (S. I. I. IV. NO. 862.)

இச் சாஸனத்தினின்றும், வண்டாழஞ்சேரி என்பது, சோழமண்டலத்துத் திருநறையூர்நாட்டைச்சார்ந்த ஊரென்பதும், அதன் தலைவன் கருணாகரத்தொண்டைமான் என்பதும் வெளிப்படையாகும். மேற்காட்டிய சாஸனம், முதற்குலோத்துங்கனது 43-ம் ஆண்டில் அமைந்ததாதலாலும், அதனுட்கண்ட வண்டாழஞ்சேரியுடையானைக் 'கருணாகரனான தொண்டைமானார்' என்றும், அவன் மனைவியை, 'தேவியாரான அழகியமணவாளனி மண்டையாழ்வார்' என்றும் உயர் பதவியினரை வழங்குமுறையில்வைத்துக் கௌரவித்தலாலும், வண்டாழஞ்சேரி என்பதை வண்டை என்று மரூஉவாக்கி வழங்குவது

தொன்றுதொட்ட தமிழ்மரபுக் கொத்ததாதலாலும்,* அபயனுடைய மகாசாமந்தனும் கலிங்கமெறிந்தவனுமாகிய கருணாகரத்தொண்டைமானே அச்சாஸனத்துக் குறிக்கப்பட்டவன் என்பது ஐயமின்றிக் கொள்ளற்குரியது. அரசர் அமைச்சர்குலம்போன்ற உயர்பதவியிலுள்ள மகளிரை ஆழ்வார் என்ற சிறப்புப்பெயரால், சோழர்காலத்தவர் வழங்கி வந்தவர் என்பது அடியில்வரும் சாஸனத்தொடர்களால் விளக்கமாகும்.

"நம்பெருமாள் (அபயன்) திருத்தங்கையார் மதுராந்தகியாழ்வார்" (S. I. I. IV. p. 18).

"சுங்கந்தவிர்த்த குலோத்துங்கசோழன்மகளார் அம்மங்கையாழ்வார்" (Ibid, p. 35.)

"விருதராச பயங்கர வாணகோவரையர் தங்களாச்சி
சோழகுல சுந்தரி விச்சாதிரி யாழ்வார் (Ibid, III, p. 153).

இனி, வண்டாழஞ்சேரியைப்பற்றி ஆராயுமிடத்து, அது, முதற்குலோத்துங்கனுக்குப் பலகலைமுறைகட்கு முன்பே, சோணாட்டிற் பிரபலம்பெற்ற ஊர்களுள் ஒன்றாயிருந்ததென்பது தெரியலாம். பரகேசரி வர்மனான முதற்பராந்தகன்காலத்தே, சோழவதிகாரிகளுள் ஒருவனாக விளங்கியவன்—"திருநறையூர்நாட்டு வண்டாழஞ்சேரியுடையான், மூவேந்தவேளான் சாத்தன் உலகன்" என்று சாஸனங்கூறுதலுங் காண்க.† இவ்வூர் முதல் இராஜராஜன்காலத்தே, க்ஷத்ரியசிகாமணிவளநாட்டைச் சார்ந்ததாகவும்,‡ அபயன்காலத்தே குலோத்துங்கசோழவளநாட்டைச் சார்ந்ததாகவும் அமைந்திருந்தது. இப்போது கும்பகோணந்தாலூகாவில் அடங்கியதோர் சிறு கிராமமாய் அதனையடுத்த தென்கிழக்கில் திருநறையூராகிய நாச்சியார்கோயிலுக்கும் திருச்சேறைக்கும் இடையில் வண்டுவாஞ்சேரி என மருவி வழங்குகின்றது.

இவ்வூர்த்தலைவன்கொண்ட கருணாகரன் என்ற பெயர், ஸ்ரீராமபிரானது திருநாமங்களுள் ஒன்றாகும். தர்ப்பசயனமெனப்படும் திருப்

---

*புதுச்சேரியைப் புதுவை என்பதுங் காண்க. ஊர்களின் பெயர்கள் இவ்வாறு மருவிவழங்குமுறையை, தொல்காப்பியம் செய்யுளியல் 80-ம் சூத்திரவுரையுள், பேராசிரியரும் நன்கு விளக்குவர்.

† Inscriptions of Madras Presidency, Ct. 1045.

‡ s. i. i. II, p. 329.

புல்லாணித் திருக்கோயிலுட் பள்ளிகொண்டருளிய அப்பெருமானைப் பற்றிக்கூறுமிடத்தே— "வருணாலயத்தை வழிவேண்டிச் சரணமாகக் கிடந்த கருணாகரப் பெருமானையுந் திருவடிதொழுது" என இராமாநுஜ திவ்யஸூரி சரிதை (பக். 164) கூறுதலுங் காண்க. கம்பராமாயண ஏடுகள் சிலவற்றின் தலைப்பிற் கம்பநாடர்பாடிய இராமஸ்தோத்திரங்களுள் ஒன்றாகக் காணப்படும்,

"நாராய ணாய நமவென்னு நன்னெஞ்சர்
பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்
காரார் மேனிக் கருணா கரமூர்த்திக்
காரா தனையென் னறியாமை யொன்றுமே."

என்ற அழகிய பாட்டினும், கருணாகரமூர்த்தி என்று இராமபிரான் வழங்கப்பெறுதல் காணலாம். வருணனை வழிவேண்டி அப்பெருமான் தருப்பசயனத்திருந்து பிராயோபவேசம்புரிந்ததைக் கூறுமிடத்தே—

"தருண மங்கையை மீட்பதோர் நெறிதரு கென்னும்
பொருண யந்துநன் னூனெறி யடுக்கிய புல்லிற்
*கருணை யங்கடல் கிடந்தனன் கருங்கட னோக்கி
வருண மந்திர மெண்ணினன் விதிமுறை வணங்கி"

என்றும், குகப்பெருமாளுக்குத் தன் தாயைப்பற்றிப் பரதாழ்வான் கூறுமிடத்தே—"கடுமையார் கானகத்துக் கருணையார்கலி யேக" என்றும் கம்பநாடர் இராமபிரானை அவனது கருணாகரப்பெயரின் பொருளை விளக்கியே கூறிச்செல்லுதலும் ஒப்பிடத்தக்கது. இது பற்றியே சயங்கொண்டாரும்—

"இலங்கை யெறிந்த கருணா கரன்றன்
இசைவெஞ் சிலையின் வலிகேட்பீர்
கலிங்க மெறிந்த கருணா கரன்றன்
களப்போர் பாடத் திறமினோ."

---

*இவ்வடிக்கு 'இரத்நாகரத்தை வழிவேண்டிக் கருணாகரன் கிடந்தான்' என்பது கருத்தாகும். கம்பரது இவ்வடியையுட்கொண்டே 'கருணையென்னுங் கடல் கருங்கடலைநோக்கிக்கிடந்ததே' என்று பங்கியெழுதியருளினர், திருவாய்மொழிக்கு ஈடு என்னும் பேருரையிட்ட பெரியோரும். (ஈடு 5, 10, 6; 6, 9, 3.)

என்ற தாழிசையுள், இராமபிரானுக்கு அப்பெயர்வழக்குண்மையைக் குறிப்பிட்டாரென்க. இருவரும் கருணாகரப்பெயருடையாராயினும், ஒருவன் இலங்கையெறிந்த புகழுடையான், மற்றவன் கலிங்க மெறிந்த புகழுடையான் என்பது அப்புலவர்கருத்தாம்.

இனி, மேற்குறித்த சாஸனத்தினின்று, கருணாகரத் தொண்டைமான் தேவிக்கு, 'அழகியமணவாளனி மண்டை' என்பது பெயர் என்பது தெரியலாம். திருவரங்கத்துப் பெரியபிராட்டியாரின் திருநாமமாகிய 'அழகியமணவாளனி'* என்பதைத் தன்பெயராகக் கொண்டிருத்தலாலும், அத்திகிரித் திருமாலு (காஞ்சீபுரம் ஸ்ரீவரதராஜப்பெருமாளு)க்குத் திருநந்தாவிளக்கொன்று அமைத்திருத்தலாலும் இத்தேவி திருமால்பத்திபூண்டவள் என்று கருதல்தகும். பல்லவருள்ளே திருமாலடிமைத்திறததாற் சிறந்தோரும் விளங்கிய செய்தி பெரியதிருமொழி, சாஸனமுதலியவற்றால் நன்கறிந்தது.

நம் கருணாகரனுக்குப் பல்லவரசர் என்ற பெயர்கொண்ட தமையனொருவர் இருந்தனர் என்பது,

> "தொண்டை யர்க்கரசின் முன்வருஞ் சுரவி
> துங்க வெள்விடை யுயர்த்தகோன்
> வண்டை யர்க்கரசு பல்லவர்க்கரசு
> மால்க ளிற்றின்மிசை கொள்ளவே."

என்ற சயங்கொண்டார்வாக்கால் அறியப்படுகிறது. இவர், கருணாகரனுடைய உபசேனைபதிகளுள் ஒருவரென்பதும், இங்ஙனம் பதவியில் இளையராயினும் உடன்பிறப்பால் மூத்தவரென்பதும், வள்ளன்மையுள்ளவரென்பதும் 'தொண்டையர்க்கரசின் முன்வருஞ் சுரவி' என்ற தொடரினின்று நன்கறியக்கிடக்கின்றன.

> "ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன் வருக வென்ன தவருள்
> அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்" (புறம். 183)

---

*அழகியமணவாளன்—திருவரங்கத்துத் திருமால்; அக்கோயிற் பெரியபிராட்டியாரை 'அழகிய மணவாளனி' என்பது, அக்காலவழக்குப்போலும்.

என்பராகலின், ஒருதாய்வயிற்றுச் சகோதரருள் மூத்தோனிருப்பவும் கருணாகரன் அரசியலிற் றலைமைவகிக்கநேர்ந்தது ஒக்குமென்க. 'முன் வருஞ்சுரவி' என்பதற்கு, யான்கூறும் இப்பொருளன்றி, வேறெதுவும் மேற்றொழிசையுட னியையாமை உய்த்தறியத்தக்கது. கருணாகரனது மூத்தசகோதரராகிய இப்பல்லவராசர், அபயன்காலத்தே படைத்தலை வருள் ஒருவராகவும் அரசியலதிகாரியாகவும் விளங்கிய—'இராசேந்திர மூவேந்த வேளார் சேனாபதிப் பல்லவராசர்'* என்பவராகக் கருதற்குப் பொருத்தம் உள்ளது. இப்பல்லவராசரைப்பற்றிய வேறுகுறிப்புக்கள் யான் எழுதிய 'கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி'யாலும்† அறியத்தக்கன. பராந்தகசோழன்காலத்தே அரசியலதிகாரியாக விளங்கிய "வண்டா ழஞ்சேரியுடையான் செம்பியன் மூவேந்தவேளான் சாத்தன் உலகன்" என்பவன், இப் பல்லவராசர் கருணாகர னிருவர்க்கும் முன்னோன்போலும்.

இற்றைக்கு 200வருஷங்கட்குமுன், வேளூர் ஆத்மநாததேசிகரால் இயற்றப்பட்ட சோழமண்டலசதகத்தில், கருணாகரன் என்பானொரு வனைப்பற்றிக் கூறப்பட்டுள்ள பாடல் வருமாறு:—

> "பூதம் பணியச் சீட்டெழுதிப் பொருளா யிலட்சம் பொன்கொடுத்த
> ஓதும் பூத மங்கலவாழ் வுடையா னீத லுடையானே
> காதல் சேருங் கடாரமெலாங் கண்ட கருணா கரப்பெருமான்
> மாது பாகன் திருப்பணிக்கே வைத்தார் சோழ மண்டலமே." (86)

இச்செய்யுளால், பூதமங்கலம் என்ற ஊரில் கருணாகரன் என்ற தலைவன் வாழ்ந்தமையும், அவன் திருவாரூர் ஸ்ரீதியாகராஜர்க்குத் திருப்பணிகள்பல செய்த வரலாறுந் தெரியவருகின்றன. பூதமங்கலம் என்பது நாகபட்டினந்தாலூகாவிலுள்ளதோர் ஊராகும். இவனைப் பற்றி வேறு கர்ணபரம்பரைச் செய்திகள் சிலவும் வழங்குவன என்பர்‡. கலிங்கமெறிந்த கருணாகரனே இவன் என்பது, ஊரும் செய்தியும் வேறுபடுதலாற் றுணியக்கூடவில்லை. ஆயினும், திருவாரூருலா, 246-ம் கண்ணியுள், அத்தலத்திற் றிருப்பணிசெய்த

*I. M. P. Tj. 189; (திருப்பனந்தாட் சாஸனம்.)

†செந்தமிழ், தொகுதி-23, பக்-183—4.

‡இலக்கணவிளக்கபரம்பரை: திருவாரூர். ஸ்ரீ. சோமசுந்தரதேசிகர் பதிப் பித்த சோழமண்டலசதகம், 86. பாட்டின் விசேடக்குறிப்புக் காண்க.

வன் கருணாகரத்தொண்டைமான் என்று குறிப்பிடப்படுதலால், இப்பூதமங்கலமுடையான் கலிங்கம் வென்ற கருணாகரன்மரபினனோ என்று சங்கிக்கவிடமுண்டு.

இனி, கலிங்கத்துப்பரணியில், கருணாகரன் தன்னரசன் ஏவலாற் கலிங்கத்தின்மேற் படையெடுத்துச்சென்று, அந்நாட்டை வென்றடிப்படுத்தியதைப்பற்றிச் சயங்கொண்டார் கூறும் செய்திகளைச் சாஸனங்கட்கு இயையச் சுருக்கிக்கூறுவேன்.

[கலிங்கவெற்றி]

சோணாட்டின் இராசதானியாக விளங்கிய கங்கைகொண்டசோழபுரத்தில், முதலிராசேந்திரன்மகள்வயிற்றுப்பேரனும், வேங்கைநாட்டரசனான சாளுக்கிய—இராசராசன்மகனுமாகிய விசயதரன் என்ற இராசகுமாரன், சோழவம்சம் நேரான சந்ததியில்லாதிருந்ததுபற்றி, அவ்வமிசத்துக்குரிய புத்திரனாக எடுத்துக்கொள்ளப்பெற்று, அவன் தாய்ப்பாட்டியான கங்கைகொண்டசோழன்தேவியால் அருமையோடு வளர்க்கப்பட்டுவந்தான். அக்காலத்து இவனுடைய தாய்மாமனான வீரராசேந்திரன் என்ற சோழன் ஆட்சிபுரிந்துவந்தனன். அரைமனையில் வளர்ந்துவந்த இவ் வரசிளங்குமரன், அறிவு ஆற்றல் பெருமை முதலிய உத்தமகுணங்கள் பெருகி, 'இவன் ஓர் அவதாரபுருஷன்' என்று கண்டோர் புகழும்படி இளம்பிராயமும் அடைந்தனன். அப்போது வடநாட்டிலுள்ள சக்கரக்கோட்டத்துத் *தாராவர்ஷனை அடக்கிவருதற்கு அந்நாட்டின்மேற் படையெடுத்துச்செல்லவேண்டிய அவசரமொன்று இளைஞனான விசயதரனுக்கு நேர்ந்தது. அவன் அக்காரியத்தின்மேல் வடநாடுசென்றிருந்தசமயத்தே, தாய்மாமனான வீரராசேந்திரன் இராசதானிநகரில் தேகவியோகமாயினன். ஆகவும், சோழசிம்மாதனத்துரிமைபற்றி அங்கிருந்த அரசவமிசத்தினருள் விவாதமுண்டாகியதனால்,† நா

*சக்கரக்கோட்டமண்டலத்து இராசதானியான பாரஸூருவிலிருந் தாண்ட ஸிந்தராஜன்—தாராவர்ஷன், (கி. பி. 1065) இவனென்பர். (Ep. Rep. No. 538 of 1909, 112.)

† தாய்மாமனான வீரராஜேந்திரனுக்கு நேர்மனைவிவயிற்றுப் பிறவாதவனும், அதிராஜேந்திரன் என்னும் பெயரினனுமாகிய மகனொருவன் இருந்தனனென்றும், சோழசிங்காதனத்துரிமை இவனுக்கில்லையாயினும், அபயன் வடக்கே யுத்தயாத்திரையாகச் சென்றிருந்தபோது, இறந்த தன் தந்தையின் சிங்காதனத்தை இவன் கைப்பற்றவே குடிகள் கலகம்விளைத்து இவனைக் கொன்றுவிட்டனரென்றும், அதுவே பரணியிற் கூறப்படும் அராசகநிலைக்குக் காரணமென்றும் என் நண்பர் ஸ்ரீ. ஏ. வி. வேங்கடராம ஐயரவர்கள், எம். ஏ, கருதுவர்.

டெங்கும் கலகமுங் குழப்பமும் விளைந்தன. தன் மாமன் இறந்ததையும், சோணாடு அராஜகமாய்க் குழப்பமடைந்திருப்பதையும் வடக்கே சென்று வெற்றிபெற்ற விசயதரன் கேள்வியுற்றதும், அதிவேகமாக அங்குநின்றுந் திரும்பிச் சோணாடடைந்து கலகத்தையடக்கி நாட்டில் முன்போல் அமைதியை உண்டாக்கியதோடு, தௌகித்திரனுச் சுவீகாரம்புகுந்த தன்னுரிமைப்படி, சோழசிம்மாசனத்தில் வீற்றிருந்து நாடு மகிழ நீதிதவறாது ஆட்சிபுரிந்தும் வந்தான். அக்காலத்து விசயதரனுக்கு இராசேந்திரன், குலோத்துங்கன், அபயன் முதலிய பெயர்கள் வழங்கலாயின. இவ்விசயதரனது ஆட்சிக்காலத்தே, அவனது பெருவலிமைக்காற்றாது பகையரசரெல்லாம் அடங்கியொடுங்கி அவனுக்குத் திறைசெலுத்தி வணங்கிவந்தனர்.

இங்ஙனம் நிகழ, ஒருகால், விசயதரன் காவிரிக்கரையில் வேட்டையாடிக்கொண்டுவந்தபோது, அங்குநின்று தொண்டைநாட்டுப் பாலாற்றங்கரையிற் பரிவேட்டையாடிவர விரும்பித் தன் பெரும் பரிவாரங்களுடன் கோலாகலமாகப் புறப்பட்டான். அப்பயணத்தில், அவன் முதலிற் சிதம்பரஞ்சென்று தங்கி ஆங்குச் சிவபிரானைத் தரிசித்துக்கொண்டு, அங்குநின்றுந் திருவதிகைசென்று பின் கச்சியம்பதியை அடைந்தனன். ஒருநாள், அக்கச்சிமாநகர் அரைமனையின் தென்மேற்குமூலையில் அமைந்த *சித்திரமண்டபத்திலே தன்பரிவாரங்கள் சூழ எல்லா இராசவைபவங்களுடனும் அபயன் சிங்காதனத்தில் வீற்றிருந்தபோது, அரசரெல்லாந் தத்தந் திறைகளைக் கொணர்ந்து அவனடி வணங்கிநின்றார்கள். அவற்றை ஏற்றுக்கொண்டு அவ்வவர்க்குரிய அருள்களைச் செய்துபின்னர், அவ்வேந்தர்வேந்தன்—"இவர்களையொழியத் தம் கடனமகளைச் செலுத்தாதொழிந்த வேறு அரசரும் உளரோ?' என்று தன் கருமத்தலைவனை திருமந்திரவோலைநாயகனை உசாவினன். அவன் அரசனைப் பணிந்து, 'பெருமானே! தத்தந் திறைகளுடன் வந்து ஏனைவேந்தரெல்லாம் நின்கழல் வணங்கினராயினும், கலிங்கதேசாதிபதி

---

*இச்சித்திரமண்டபம், முதற்பராந்தகன்காலத்தே (900—950 கி. பி.) விளங்கியதென்பது "யாண்டு 16-வது; உடையார் கச்சிப்பேட்டுக் கோயிலினுள்ளால் தெற்கில சித்திரமண்டபத்தெழுந்தருளியிருக்க" எனனும சாஸனப பகுதியால் அறியலாம் (s. i. i. iii, p. 269).

யாகிய அனந்தவன்மன்* என்பவன்மட்டும், உரியதிறையொடும் இருமுறையாக வந்திலன்' என்றான். இதுகேட்டதும், வேந்தர்பெருமான் முகத்திற் புன்முறுவல் அரும்பியதேயன்றிச் சிறிதும் கோபக்குறி தோன்றியதில்லை. 'இதன்பொருள் என்னையோ? இனி நிகழ்வது யாதோ' என்று உடல் குலைந்து நடுங்கலாயினர், வந்துநின்ற ஏனை மன்னர்கள். அப்போது, சோழன் தன் தானைத்தலைவரை நோக்கி, 'கலிங்கர்பதி படைவலியற்றவனாயினும், அவனது குன்றரண் பெருவலிமைகொண்டது; அதனால் நம யானைப்படையுடன் நீவிர் சென்று அம்மலையரணை யிடித்து, கலிங்கனையும் பிடித்துவருதிர்' என்று கட்டளையிட்டனன். இவ்வாறு தன்னரசன் ஆணையெழுந்ததும் தலைமைச் சேனாபதியும் பல்லவகுலதிலகனுமாகிய கருணாகரத்தொண்டைமான் எழுந்து அடிவணங்கி—'எழுகலிங்கங்களையும், வேந்தர்வேந்தே! யானே படையெடுத்துச்சென்று அழித்துவருவல்' என்று கூறினன். இங்ஙனங்கூறி விரைந்து படையழிக்கும்விருப்புடன், அவன் அரசன்பால் விடைகேட்க அவனும் 'அங்ஙனமேசெய்க' என்று ஆஞ்ஞையளித்தனன். அப்போதே, சேனாபதியின் கட்டளையால் நாற்பெரும்படைகளும் பல்லியங்களார்ப்பப் போர்க்கோலம்பூண்டு யுத்தயாத்திரைக்குச் சித்தமாயின. பிரதான சேனாபதி-கருணாகரனும், உபசேனாபதிகளான பல்லவரசர், வாணகோவரையன்,† முடிகொண்டசோழன் என்பாரும் தத்தம் மத்தயானைகளின்மேல் ஆரோகித்தனர். இங்ஙனமாகப் படைகளும் படைத்தலைவர்களும் யாத்திரைபுறப்பட்டு இரவும் பகலும் வழிக்கொண்டு இரைவேட்டெழுந்த புலிகள்போல் இகன்மேற் சென்றனர். அப்பெரும்படை ‡ [1]பாலாறு, [2]குசைத்தலை, [3]முகரி, [4]கொல்லி, [5]பெண்ணை, வயலாறு,

---

*இவன் சாஸனங்களில் அனந்தவர்மன் சோடகங்கன் (கி.பி 1078—1146) எனக் கூறப்படுகின்றானென்பர் (Ep. Rep. 1905, p. 52—3).

†வாணகோவரையன் முடிகொண்டசோழன் என்ற இருவரையும் பற்றிய விசேடச்செய்திகளை, யான் எழுதிய 'கலிங்கத்துப்பரணியாராய்ச்சியுட் காண்க (செந்தமிழ். தொ. 23, பக்—184—5).

‡ 1, 2—செங்கற்பட்டுஜில்லாவில் ஓடுவன; பின்னதைக் குசஸ்தலை என்று இப்போதும் வழங்குவர். 3—பொன்முகரி அல்லது ஸ்வர்ணமுகி எனப் பெற்று, ஸ்ரீகாளஹஸ்திப்பக்கத் தோடுவது. 4—வட-ஆர்க்காடு, நெல்லூர் ஜில்லாக்களிற் செல்லும் கல்லாறுபோலும். 5—வடபெண்ணை.

[6]மண்ணாறு, [7]குண்டியாறு, [8]பேராறு, கோதாவரி, [9]கம்பை, [10]சந்தநதி, [11]கோதமை—என்ற நதிகளைக்கடந்து யுகாந்தக்கடல் கொதித்துவருவது போலக் கலிங்கதேசத்தினுட் புகுந்து, தங்கள் வருகையை அறிவிப்பவர் போல் நாடெங்குந் தீக்கொளுவிச் சூறையாடினர். அந்நாட்டார் சோழ சேனைகளின் கொடுமைக்காற்றாது ஓடி, அத்தாணியில் அமைச்சருட னிருந்த தம்மரசனிடம், 'எடுத்துவரும்படைகள் சோழன் நம்மேல் விடுத்தனவாகும்' என்று நடுங்கித் தெரிவித்தனர். கலிங்கர்பதி அதனைக் கேட்டு 'திறைகொடுக்க நான் மறுத்தமைக்காகச் சோழன் தன்படையை ஏவினன் ஆவன. வலியனான அபயனுக்கன்றி அவன் விடுத்த சேனைக் கும் நான் எளியனோ? காட்டரண், மலையரண், கடலரண் என்ற மூவகை அரணுமுடையது நம் கலிங்கதேசம் என்பதை அச்சோழன் அறியான் போலும்; அவன்சேனையை எதிர்த்தழிப்பேன்' என்று வீராவேசத் துடன் தன் மந்திரிகளிடங் கூறினன். கூறவும், அவ்வமைச்சருள் ஒருவனான எங்கராயன் என்பான் எழுந்து—'அரசே! நீ சினந்தாலும் உறுதிகூறுதொழிதல் என்போன்றவர் கடமையன்றாதலால், யான் சொல்வனவும் சில உண்டு' என்று கூறிவிட்டு, 'பாண்டியரைவரையும் அவர்நாட்டிலும், சேரரைச் *[1]சாலை [2]விழிஞங்களிலும், [3]வத்தவனைச் சக்கரக்கோட்டத்தும், சளுக்கியரை நவிலை [4]அளத்தி என்ற ஊர்களி லும், இன்னும் வேந்தர்பலரைப் பல்லிடங்களிலும் அவ்வபயன் வென்றடிப்படுத்தியதெல்லாம் தான் சென்றன்றித் தன் தண்டைக் கொண்டேயன்றோ? அவ்வாறே, இப்போதும் சக்கரவர்த்தியான

---

6—மன்னேறு என வழங்கப்பெற்று நெல்லூர்ஜில்லாவில் ஓடுவது. 7—குண்டூர்ஜில்லாவில் அப்பெயருடன் ஓடுவது; குண்டலகம்மா என்றும் வழங்கும், 8—கிருஷ்ணாநதி; பேராற்றங்கரைக கொபபத்து' என்பது சாஸனத் தொடர். 9, 10, 11—என்ற 'மூன்றும சப்தகோதாவரிகளைச் சார்ந்தனவாகக் கருதப்படுகின்றன.

* [1]சாலை—திருவனந்தபுரத்தைச் சார்ந்த காந்தளூர்ச்சாலை.

[2]விழிஞம்—மேலைக்கடற்கோடியி லுள்ளதோர் துறைமுகம்; திருவனந்த புரத்துக்குத் தெற்கே 10-வது மைலில் உள்ள தென்பர். S. I. I. iii, p. 13. 'விழிஞக்கடற் கோடியுள்' என்பது இறையனாரகப்பொருள் மேற்கோள்.

[3]மத்தியமாகாணத்திலுள்ள சச்கரக்கோட்டமண்டலத்து வத்ஸராஜ்யத்தை (Baster State) ஆண்ட தாராவர்ஷன் ஆவன் (Ep. Ind. ix, p. 178).

[4]இது மைசூர்-இராச்சியத்தைச் சார்ந்த நவிலை நாட்டின் (Navale Nadu) தலைமையூராகக் கருதுவர் (s. i. i. iii, p. 1307).

அவனது சக்கரமாகவுள்ள கருணாகரனைத் தலைமையாகக்கொண்டு, அவன்சேனை நம்மைத் தாக்க வருகின்றது. இப்போது என்னை நீ முனியக்கூடுமாயினும், அவன் சேனைமுன் நீ நிற்கும்போது, யான் கூறியதன் உண்மையை உணர்வாய்'—என்று கூறினன். இவற்றைக் கேட்ட கலிங்கவரசன் அவ்வார்த்தைகளைப் பொறாது தன்னமைச்சனைப் பலவாறுகடிந்து, தன்படைகட்குமுன் எதுவும் நிற்குந் தரத்ததன்று என்று கூறிவிட்டு, எடுத்துவருஞ் சோழன் சேனையை எதிர்த்து அழிக்கும்படி தன் படைத்தலைவர்க்குக் கட்டளையிட்டான். உடனே, யானை தேர் பரி காலாட்கள் என்ற நால்வகைக் கலிங்கசேனைகளும் சோழன் பெரும்படையைத் தாக்கலாயின; பெரும்போர் மூண்டது. இருதிறத்து வீரர்களும் அத்யாச்சரியகாமான வீரச்செயல்களைக்காட்டிப் போர்புரிந்துவந்தனர். இருசேனைகளும் ஒத்த பலமுடையவாய்ப் பொருதுவரும்பொழுது, சோழசேனாபதி—கருணாகரன் மதகளிற்றின் மேற்கொண்டு நேராகவே போர்முகத்துள் நுழைந்தனன். அவன் யுத்த களத்துட் புகுந்ததுமுதலே, சோழன்படைகள் உற்சாகமிகுந்து கலிங்கசேனைகளைச் சின்னபின்னஞ் செய்யலாயின. அதனால் அப்பகைச் சேனைமுழுதும் எதிர்த்து நிற்கும் வலியற்றுத் தோற்றோடியது. எண்ணிறந்த களிறுகளுடன், குதிரை தேர் ஒட்டகம் நிதித்திரள் மகளிர் கூட்டம் முதலிய கலிங்கர்செல்வ மெல்லாவற்றையும் சோழசேனைகள் கைப்பற்றிக்கொண்டன. தோல்வியுற்ற கலிங்கர்பதி அப்போரினிடையே ஓடி யொளித்தனன். இவ்வாறாகத் தன்சேனை பெருவெற்றி பெற்றபின்பு கலிங்கவேந்தன் ஓடிப் பதுங்கிய இடத்தையும் சோழசேனாபதி ஒற்றர் மூலந் தேடலானான். அவ்வேந்தன் தன் பெரும்பலத்துடன் மலையாணொன்றைப் பற்றியுள்ளான் என்ற சுவடு ஒற்றரால் அவனுக்குத் தெரிய வந்தது. உடனே அவ்வரணைக் கருணாகரன் சேனைகள் அத்தமனத்துள் வளைந்துகொண்டு தாக்கலாயின. அங்கிருந்த கலிங்கப்படைகளும் சோழசேனையால் பெரும்பாலும் அழிக்கப்பட் டொழிந்தன. எஞ்சி நின்ற ஒருசிலர் மலைக்கொருவராக ஓடி யொளித்தனர். இங்ஙனமாக—

"கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப நாட்டிக்
கடகரியும் வயமாவுந் தனமுங் கொண்டு
சுடர்க்கதிர்வா ளபயனடி யருளி னோடுஞ்
சூடினான் வண்டையர்கோன் றொண்டை மானே." (458)

இவ்வளவே, கலிங்கப்போரைப்பற்றிய வரலாறுகளாகப் பரணியாலும் பிறவற்றாலும் அறியப்பட்டவை. இச்செய்திகளை அடிப்படையாகக்கொண்டு, காடுகெழுசெல்வியாகிய துர்க்கைக்குப் பரணிநாளிற் கூழுந் துணங்கையுங் கொடுத்து* வழிபடுவதோர் பழையவழக்குப்பற்றி

"கடவுள் வாழ்த்துக் கடைதிறப் புரைத்தல்
கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டம்
கடிகண மூரைத்தல் காளிக் கதுசொலல்
அடுபேய்க் கவள்சொல லதனுற் றலைவன்
வண்புக ழுரைத்த வெண்புறத் திணையுற
வீட்ட லடுகளம் வேட்டல்" (இலக். வி.)

என்பன முதலியவாகப் பகுத்துப் பேய்கள்கூற்றாகவும் தேவிகூற்றாகவும் சோழராது திருமுடியடைவையும்† அபயனது பிறப்பு வளர்ப்பு முதலிய செய்திகளையும் புனைந்துரைவகைபாற் புலவர்பெருமானாகிய சயங்கொண்டார் தம் பரணியுள் மிக வழகாகப் பாடுகின்றார். பரணிநாளின் அதிதேவதை கொன்றுயிர்பருகும் யமதருமனாதலின், பரணிக்களத்தைப் பகைவனுக்குரிய இடமாகவே யாண்டும் அமைத்துப்பாடுதல், பண்டையோர்கொண்டமுறை என்பர் அறிந்தோர்; கூத்தர் இயற்றிய தக்கயாகப் பரணியும் பிறவும் இங்ஙனமே பெயர்பெற்றிருத்தலுங் கண்டுகொள்க.

கலிங்கத்துப்பரணித் தலைவனான அபயனது 45-ம் ஆண்டிற் பொறிக்கப்பட்ட ஆலங்குடிச் சாஸனமொன்றில்‡, இக்கலிங்கப்போரின் விவரம் காணப்படும் பகுதி வருமாறு:—

"வடதிசை வேங்கை மண்டலங் கடந்து
தாங்கிய கலிங்கமுந் தழலெரி பரப்ப

---

* தொல்காப்பியம், செய்யுளியல், 149-ம் சூத்திரவுரையுள்—பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இங்ஙனம் எழுதல் காண்க.

† கலிங்கத்துப்பரணியின் இராசபாரம்பரியப்பகுதிக்குத் திருமுடியடைவு என்ற பெயர்வழக்கு, சென்னை "மியூசியம்" கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள பரணிப்பிரதியொன்றிற் கண்டது. வைஷ்ணவசம்பிரதாயத்தில், சிம்மாசனாதிபதிகளான ஆசாரியபாரம்பரையின் வரலாறுகூறும் நூல்கள் "பெரியதிருமுடியடைவு, சிறியதிருமுடியடைவு" என்ற குறியீடுகள் பெற்றிருத்தலாலும், இவ்வரிய வழக்கினுண்மை பெறப்படும்,

‡ S. I. I. iv. p. 136.

விலங்கல் போல விலங்கிய வேந்தர்
விட்டவெங் கரியொடு பட்டனர் புரளப்
பொருகோ பத்தொடு போர்முக மதிர்வரு
கோமட் டையன் மாதவ னெதிர்பட
எங்க ராய னிசலவ ரேச்சணன்
மாப்பிறளா(?) மதகரி யீராசணன்
தண்டபதி யாகிய தலைச்சே னாபதி
மண்டலிக தாமய னெண்பாத்(?) திசைமுகன்
போத்தயன் கேத்தணன் செருச்சே னாபதி
என்றிவ ரனைவரும்
வெற்ற வேழத்தொடு பட்டு மற்றவர்
கருந்தலை யோடு வெண்ணிணங் கழுகொடு
பருந்தலைத் தெங்கணும் பரப்ப வுயர்த்துத்
தருங்கட லாடைத் தராதலந் திறந்து
கலிங்க மேழுங் கைக்கொண் டொருபகல்
*          *          *          *
வீரசிம் மாசனத்து வீற்றிருந் தருளின
கோவிராச கேசரி வன்மரான...
ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு—"

இவ்வடிகளினின்று கருணாகரன்சேனையோடு எதிர்த்துப்பட்ட கலிங்கசேனாபதிகள் இன்னாரின்னார் என்பது தெரியலாம். இவர்களுட் சிலர் பெயர்கள் தெளிவாகவில்லை. அபயனது மற்றச் சாஸனங்களெல்லாம் அவனது கலிங்கவெற்றியைப் பொதுவாகக் கூறுவனவேனும், அப்போரை விவரமாகச் சிறப்பித்துக்கூறும் சாஸனமாக இப்போது தெரியவருவது இஃதொன்றே எனலாம். இதனுட்கண்ட கலிங்கசேனாபதிகளுள் எங்கராயன் என்பவன், கருணாகரனுடன் எதிர்க்காது அவனோடு சந்துசெய்துகொள்ளுமபடி தன்னரசனான கலிங்கராசனுக்குக் கழறிக் கூறியவனென்பது—

"என்று கூறவே யெங்க ராயனான்
ஒன்று கூறுகே னென்று ரைக்குமால்"

எனவரும் பரணித்தாழிசையால்* அறியப்படுகின்றது. இனி, மேற்காட்டிய ஆலங்குடிச் சாஸனத்தால் அபயனது 45-ம் ஆட்சி வருஷத்

*இத்தாழிசை, பரணிப் புதுப்பதிப்பில், 365-ம் தாழிசைக்குப் பிரதியாகக் கீழ்க்குறிப்பில் வைத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது; சாஸனத்துக்கும் மோனைக்கும இயைய 'எங்கராயன்' என்று இதனுள் அமைதல் பொருந்தும்.

துக்குமுன்பு (கி. பி. 1115) கருணாகரனது கலிங்கப்படையெடுப்பு நடந்திருத்தல்வேண்டுமென்பது பெறப்படும். அபயன்மகனும் இளவரசனுமான விக்கிரமசோழன் கருணாகரனுடன் இக்கலிங்கப்போர்க்குச் சென்றவனென்று சரித்திரவறிஞர்சிலர் கருதுவர். அங்ஙனமாயின், அப்போர்க்குச் சென்ற சேனாபதி உபசேனாபதிகளின்பெயர்களை எடுத்துச் சிறப்பித்துக்கூறும் சயங்கொண்டார் அவ்விளவரசனையும் அவ்வாறே கூறுதுபோகாரா தலாலும் வேறு சாஸனப்பிரமாண மில்லாமையாலும் அங்ஙனந் துணியக்கூடவில்லை. விக்கிரமசோழன் மெய்க்கீர்த்தியுள்—

"தெலிங்க வீமன் விலங்கன்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி"

என்று அவனது கலிங்கவெற்றி புகழப்பட்டுள்ளதே எனின், அஃது, அபயன் கி. பி. 1095—6-ல் நடத்திய தென்கலிங்கப்போர்க்கு* அவ்விக்கிரமன் தன் சிறுபிராயத்திற் சென்றதைப்பற்றியதாகவே தோற்றுகின்றது. இரண்டாமுறையாக நடத்திய வடகலிங்கப்போரோ, அபயனது ஆட்சிமுடிவுக்குச் சிலவருஷங்கட்குமுன் கருணாகரன் நடத்தியதென்க. இதனைப்பற்றிக் கலிங்கத்துப்பரணியாராய்ச்சியுள்ளும் நன்கு விளக்கியுள்ளேன். †

இனி, சென்னையிலே சென்றவாண்டிற் கூடிய "மூன்றாவது கீழ்த்தேச வித்தியாசங்கத்தில்‡ அரங்கேறிய வியாசங்களுள்ளே—"கருணாகரத்தொண்டைமானும ஸ்ரீஸூக்திரத்நஹாரமும்" என்பதும் ஒன்று. இதனை எழுதிப்படித்தவர், திருவனந்தபுரம் சாஸனவிலாகா அத்யக்ஷரான ஸ்ரீமாந். ஏ.எஸ். இராமநாத ஐயரவர்கள், B.A. ஆவர். 'ஸூக்திரத்நஹாரம்' என்ற பெயர்கொண்ட வடமொழி நீதிதிரட்டின் பிரதியொன்று, திருவனந்தபுரம் அரைமனை ஸரஸ்வதிமாலில் உள்ளதெனறும் அந்நூலைக் குலசேகரன் என்ற தனரசன்பெயரிட்டுத் தொகுத்தவர் அவனுடைய தலைமைமந்திரியான காலிங்கராசர் என்பவரென்றும் ஐயரவர்கள் குறிப்பிட்டுவிட்டு, இக்காலிங்கராசர் முதற்குலோத்துங்கனுகிய

* Ep. Rep. 1905, p. 52—3.

† செந்தமிழ். தொகுதி 23 பக். 180—1.

‡ All India Oriental Conference, Third Session—Madras.

அபயன் சேனாபதியாகவும் சிதம்பரமுதலிய கோயில்களிற் றிருப்பணி செய்தவனாகவும் சாஸனங்களால் அறியப்பட்ட காலிங்கராயனேயாதல் வேண்டுமென்றும், இக்காலிங்கராயனது சாஸனங்களில் இவற்கு அருளாகரன் என்ற மறுபெயரும், தன்னரசனான அபயன்பொருட்டு வடவரசருடன் போர்கள்பல புரிந்தசெய்தியும் காணப்படுதலால், இவனே அவ்வபயன் றலைமைச்சேனாபதியாய்க் கலிங்கமெறிந்த கருணாகரனாக வேண்டுமென்றும், வண்டையென்ற ஊரின் தலைவனாகக் கருணாகரனையும், மணவில் என்ற ஊரின்தலைவனாக இக்காலிங்கராயனையும் பரணியும் சாஸனங்களும் முறையே வேறுபடக்கூறினும், முதலில் வண்டையி லிருந்த கருணாகரனே கலிங்கம்வென்றதன்பின் மணவிலைத் தனக் குரிய ஊராக மாற்றியிருக்கக்கூடுமென்றும், ஸௌத்திராந்நஹாரத்தில்— குலசேகரமந்திரியாக இக்காலிங்கராசனைக் கூறியுள்ளதே எனின், அக் குலசேகரப்பெயர் அபயனுக்குரியதெனபது 'வாழி சோழ குல சேகரன்' என்ற பரணித்தொடரால் அறியப்படுதலின், அவ்வபயனே அந் நீதிநூல் கூறும் குலசேகரன் என்றும் எழுதியிருக்கின்றார்கள்.

இவற்றால், குலசேகரன்மந்திரி காலிங்கராசன், மணவிற் காலிங்க ராயனான அருளாகரன், கலிங்கம்வென்ற கருணாகரன் என்ற மூவரும் ஒருவரே என்பது ஐயரவர்கள் முடிபாதல் நன்குவிளங்கும். இக் கொள்கைக்கு அவர்கள்கூறிய ஏதுக்கள் பொதுப்பட நோக்கும்போது பொருந்தியவைபோலவே தோற்றினும், ஆராய்ச்சியில் அதற்குத் தடைகள் பல நிகழ்கின்றன. ஐயரவர்கள் ஈற்றிற் குறித்தபடி, 'சோழகுல சேகரன்' என்ற பரணித்தொடரைக்கொண்டு அபயனுக்குக் குலசேகர னென்ற பெயருண்டென்று கருதுவது ஏற்புடையதன்று. அத்தொடர் ஒன்றுபடவொன்று இணைந்து 'சோழகுலத்துக்குக் கிரீடம்போன்றவன்' என்ற பொருள் பயப்பதாம். 'சோழகுலதுங்கன்'(82), இரவிகுலோத் தமன (12), உபயகுலோத்தமன் (2) என்பனபோல, 'சோழகுலசேகரன்' என்பதும் பாடலமைதிக்காகக் கவி அமைத்துக்கொண்டதேயன்றி, இயற்பெயரைக் குறிக்குந் தொடராகாது. இங்ஙனம் முன்விசேடண மின்றித் தனித்தநிலையில், குலோத்துங்கன் என்பதுபோலக் குலசேகர னென்பது அபயனுக்கு எங்கும் வழங்கக்காணாமையால், ஸௌத்திராந் ஹாரஞ்செய்த காலிங்கராசனை அவ்வபயன்மந்திரியாகக் கருதச் சிறிதும் இடமில்லையென்க. எனவே, ஐயரவர்கள் காட்டியவாறு, பாண்

டியன் மாறவர்மன்—முதற்குலசேகரனது (கி. பி. 1268–1308) மந்திரி
யாகச் சாஸனத்தால் அறியப்பட்ட காலிங்கராசனாகவே, குலசேகர-
ஸமுத்திரக்ரஹாரந் தொகுத்த காலிங்கராயனைக் கருதல் பெரிதும்
பொருந்துவதென்னலாம். காலிங்கராசனென்ற பெயர் பாண்டியனைகீ
ழமர்ந்த அதிகாரிகள் சிலர்க்கும் சாஸனங்களில் வழங்குதல் அறியத்
தக்கது.

இனி, மணவிற் காலிங்கராயனது சாஸனங்களின் *வடமொழிப்
பகுதியுள்—அவனுக்குச் சபாநர்த்தகன், மாளுவதாரன் அருளாகரன்
என்ற பெயர்களும் தமிழ்ப்பகுதியுள் கூத்தன், காலிங்கர்கோன், தொண்
டையர்கோன் என்ற பெயர்களும் பயில்கின்றன. இவற்றுட் கூத்தன்
என்பது சபாநர்த்தகன் என்ற வடபெயரோடு ஒத்த பொருளது. அவ்
வாறே, அருளாகரன் என்பது கருணாகரனோடு ஒத்ததாய் ஒருவன்
பெயர்களேயாம் என்றும், காலிங்கராசனுக்கு மணவில் என்ற ஊரையும்,
கருணாகரனுக்கு வண்டையென்ற ஊரையும் வேறுபடச் சாஸனங்களும்
பரணியுங் கூறுகின்றனவே எனின், அப்பரணி கூறும் கலிங்கவெற்றிக்
குப் பின்பு கருணாகரன் என்ற பெயர்நீங்கிக் காலிங்கராசன் என்ற பெய
ரும், வண்டையை நீங்கித் தொண்டைநாட்டு மணவில் என்ற ஊரும்
அபயன்சேனாபதி பெற்றவனாதல்வேண்டுமென்றும் ஐயரவர்கள்
கருதுகின்றார்கள். இக்கூற்றுக்களை ஆராய்வேன்.

தொண்டையர்கோ, அருளாகரன், காலிங்கராயன் என்ற பெயர்
கள் கருணாகரனுக்கும் பொருந்தக்கூடியனவாயிருத்தல்பற்றிப் பொது
வாக அவ்வாறு கருதக்கூடுமேனும், ஊன்றிநோக்குமிடத்து அப்பெயர்
களையுடையான் கருணாகரனின் முற்றும் வேறானவனென்பதே தெளி
வாகின்றது. கருணாகரன் பல்லவவமிசத்தவனென்பது சயங்கொண்
டார்வாக்கால் நன்கறியப்பட்டதாம். இக்காலிங்கராசனோ வேளாளமர
பினன். இதனை "வேளாண் குடிமுதலான தொண்டையர்கோன்' என்
னும் திருவதிகைச் சாஸனப் பாடற்பகுதியால் (18) அறியலாம். பல்
லவர் வேளாளமரபினரல்லர் என்பது திண்ணம். "பிரமனாதியாக வாரா
நின்ற"வர் என்றும், பாரத்துவாசகோத்திரத்தவர் என்றும் பல்லவர்க்

* S. I. I. IV, no. 225; திருவதிகைச் சாஸனம் (செந்தமிழ், தொ. 23,
பக்—).

குக் கூறப்படும் குலவரலாறுகள், வேளாளர்க்கு எவ்வகையினும் இயை வனவல்ல. "மறைமொழிந்தபதி மரபின்வந்த குலதிலகன்" என்று கருணாகரனைப் பிரமன்மரபினனாகவே சயங்கொண்டார் பாடுதலுங் காண்க.* இனிக் காலிங்கராயனை 'வேளாண்குடிமுதலான்' என்றதற் கேற்ப, அவனை 'அரும்பையர்கோன்' என்றும் சிதம்பரசாஸனப் பாட் டொன்று (23) கூறுகின்றது. 'அரும்பை' என்பது வேளாளர் குடிப்பெயருள் ஒன்று; 'அரும்பூர்க்கூற்றத்து வேளாளர்'† என்பது வழக்கு. இவற்றால், அருளாகரனான காலிங்கராசனும் கருணாகரத் தொண்டைமானுங் குலத்தால் வேறுபட்டவர் என்பது விளங்கியது.

இனி, தன்னரசனான 'அபயனுக்கேயாக—மலேகின்ற தொண்டை யார் மன்' னாகிய காலிங்கராயனது போர்ச்செய்கைகளுள், மலைநாட்டில் அவனடத்தியவற்றையே, அவனைப்பற்றிய சாஸனப்பாடல்கள் மிகுதி யுஞ் சிறப்பிக்கின்றன.

"தென்னன், குடமலை நாடெறிந்து கொண்டவேற் கூத்தன்" (திருவதி. சா. 6)
"மலைநாடு கொண்டபிரானை" (ஷை. 14)
"வேணாடும் வெற்பனைத்துஞ் செந்தீ விளைவித்தான்" (ஷை. 22)
"வில்லவர்தம் வெஞ்சிலையி னாற்றறனை மாற்றியகோன்" (சிதம்.சா.5)
"சேரனளப்பரிய வாற்றற் கிழிவு கண்டான்" (ஷை, 15.)

என்பன காண்க. கலிங்கப்போர்க்குப் பின்பே, இவன் காலிங்கராயன் என்ற பேரையும், மணவில் என்றவூரையும் பெற்றவனாயின், அப் போர் வெற்றிக்குப்பின் வரையப்பட்ட சாஸனங்களிலுள்ள வடமொழிச்சுலோ கங்களும் தமிழ் 55-வெண்பாக்களும், கலிங்கத்திலடைந்த அவன் பெரு வெற்றியை வெளிப்படக்கூறிப் பலபடியாகப் புகழாமற்போகுமோ? அவ் விசயம்பற்றிய குறிப்பொன்றுமே அப்பாடல்களிற் காணப்படாமைக்குக் காரணம் யாது? சாஸனங்களில்—

---

* கலிங்கத்துப்பரணியாராய்ச்சியுள் '11. கருணாகரன்மரபு' என்ற தலைப் பின்கீழ் என்னால் எழுதப்பெற்ற விஷயங் காண்க. (செந்தமிழ். தொகுதி 23. பக். 179.)

† 'அரும்புகட்டி வேளாளர்' என்று இக்காலத்தார் சிதையவழங்குவர்.

"வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்குங்
குடைவேந்தன் தொண்டையார் கோ." (சிதம். சா. 2)

"மலைமன்ன ரேனை வடமன்னர் மற்றக்
குலமன்னர் செல்வமெலாங் கொண்டு" (ஷை. 4.)

என்று பொதுவாக வடமன்னரைக் காலிங்கர்கோன் வென்றசெய்தி குறிக்கப்பட்டதாயினும், அவன் அப்பெயர்பெற்றதற்குச் சிறந்தகாரணமாதற்குரிய கலிங்கப்போரைச் சுட்டியபாட லொன்றுமே காணப்பெறாமையால், அவ் வடமன்னர் கலிங்கரன்றி வேறானவரென்பதே தெளிவு. அவ்வாறே, மணவில் என்ற ஊரும், கலிங்கவெற்றிக்குப்பின் அவன் வண்டையைவிட்டு மாற்றிக்கொண்டதென்பதும் பொருத்தமன்று. மேலே நான் விளக்கிப்போந்தபடி, வண்டையென்ற வண்டாழஞ்சேரி, சோணாட்டிலே கருணாகரனுக்குப் பல தலைமுறைகட்கு முன்பே சோழவதிகாரிகள் வாழ்ந்துவந்த பிரபல ஊராகும். அவ்வூரினனாகிய சோழசேனாபதி காலிங்கவெற்றிக்குப் பின்பு, அவ்வூரின் வாசனையும் இல்லையாம்படி அதனை அறவே விட்டொழிய நியாயமில்லை. வண்டைக் கருணாகரன் என்று சயங்கொண்டாராற் பெரிதுஞ் சிறப்பிக்கப்பெற்றவன், மணவிற் காலிங்கராயனாக ஊரும் பேரும் மாறும்படி அவ்விரண்டற்குஞ் சேர நேர்ந்த தௌர்ப்பாக்கியநிலை என்னையோ? ஊரைமாற்றியவனாயின், மணவிற் சேனாபதியைப்பற்றிய 55-சாஸனப்பாடல்களுள் ஒன்றேனும், அவனது பழையவண்டையைச் சுட்டாதுபோகாதென்பதும் ஒருதலை.

இனி, காலிங்கராசனென்றபெயரை மணவிற்சேனாபதிபெற்றதற்கு, பரணிகூறுங் கலிங்கப்போரே காரணமாகவேண்டுமென்றும் நியதியில்லை. அபயனது நீண்டஆட்சியில் அவனது 23-வது ஆண்டுக்குமுன் (கி. பி. 1095) ஒரு கலிங்கப்போரும், 45-வது ஆண்டுக்குமுன் ஒரு கலிங்கப்போரும் நடந்தேறின என்பது சாஸனபரிசோதகர்க்கெல்லாம் ஒத்தது. அவற்றுள் முன்னதாகியபோரில் அச்சேனாபதி வெற்றிபெற்றதினின்று காலிங்கர்கோன் என்ற பெயர் அரசனால் அவன் பெற்றிருத்தல்கூடும். அன்றேல், வமிசபரம்பரையில் அப்பெயர் அவனுக்கு வழங்கியிருத்தலும் ஆம்.* இனி, இக்காலிங்கராயனும், கருணாகரனும் வெவ்வேறானவரென்பதற்கு மற்றொரு சிறந்த பிரமாணமும் கூறுவேன்.

* முதல் இராசேந்திரனாட்சியில், சோழவதிகாரிகளுள் ஒருவன் காலிங்கராசன் என்ற பெயர் கொண்டிருத்தலுங் காண்க. (T. A. S. VOL. 1. p. 165.)

கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தர், அபயன்மகனான விக்ரமசோழன் மேல் *உலாப்பாடியுள்ளசெய்தி பலரும் அறிவர். உலா என்பது தலைவனொருவன் யானையேறிப் பவனிபோந்ததை வருணிப்பதாய், அவன் இளமையைப் பலபடியாகச் சிறப்பித்துப்பாடும் பிரபந்தமாகும். அதனால் விக்கிரமசோழனது ஆட்சித்தொடக்கத்தே கூத்தர் அவ்வுலாப் பாடியவர் என்பது பெறப்படும். அக்காலத்தில், தந்தை-அபயனிடம் பிரபலராய் விளங்கிய சேனாபதிகளிற் பலரும் சீவிதராயிருந்தவரென் பது, இன்னாரின்னார் அவ்விளஞ்சோழனது பவனியுடன்போந்தனர் என்று விவரமாகக் கூத்தர் பாடுதலினின்று தெரியவருகின்றது. அங்ஙனம் உடன்சென்ற தானைத்தலைவருள்ளே, கருணாகரனை—"ஒருநாட் கொண்ட பரணி, மலையத் தருந்தொண்டை மானும்" என்று தலைவனைக்கூறிவிட்டுப் பின், முனையர்கோன், சோழகோன், கண்ணன், வாணன் என்ற இவர்களைக் குறித்து, அடுத்து ஆறுவானாக—

"..............................வேங்கையினுங்
கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்தும்
ஓடா விரட்டத்து மொட்டத்தும்—நாடா
தடியெடுத்து வெவ்வே றரசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனும்"

என்று, காலிங்கராயனைத் தனியே சிறப்பிக்கின்றனர், ஒருகாலத்தவரான அக்கூத்தர். இதனால், கருணாகரனும் காலிங்கராயனும் வேறானவரே என்று மேற்கூறிப்போந்த என் முடிபு ஐயத்துக்கிடமின்றி உறுதிப்படு தல் காண்க. இவ்வுலாவடிகளிற் காலிங்கர்கோன் புரிந்தனவாகக்கண்ட போர்களைத் தம் இளைஞனான விக்கிரமசோழன்காலத்து நடந்தனவல்ல என்பதும், அவன் தந்தைகாலத்து நடந்தேறியவை என்பதும் சொல் லாதே அமையும். உலாவிற் குறிக்கப்பட்ட காலிங்கர்கோனே சிதம்பர முதலிய சாஸனப்பாடல்கள்கூறும் காலிங்கர்கோன் என்பதற்கு, அவ் வுலாவடிகளிற்கண்ட போர்ச்செய்திகள் பலவும் சாஸங்களிலும் சிறப்பிக் கப்பட்டிருத்தலே தக்க சான்றாகின்றது. கொல்லம் முதலிய மலைநாட் டில் நிகழ்ந்த போர்களை—

"தென்னன், குடமலைநாடெறிந்து கொண்டவேற் கூத்தன்"
(திருவதி. சா. 6.)

---

* இவ்வுலா, செந்தமிழ்ப் பிரசுரங்களுள் ஒன்றாகப் பலவருஷங்கட்குமுன் என்னாற் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

"தென்னாடன் சாவேற்றின்* றிண்செருக்கை யன்றவித்தான்." (ஷை. 16)

"கொல்ல மழிவுகண்டான்" (சிதம். சா. 15.)

என்பவற்றானும், வேங்கை, இரட்டம், ஒட்டத்துப்போர்களை,

"வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்குங்
குடைவேந்தன் றொண்டையார் கோ." (சிதம். சா. 2)

"மலைமன்ன ரேனை வடமன்னர் மற்றக்
குலமன்னர் செல்வமெலாங் கொண்டு" (ஷை. 4.)

என்பவற்றானும் சாஸனப்பாடல்கள் குறிப்பிடுதல் கண்டுகொள்க. மற்றைப் படைத்தலைவரினும், காலிங்கர்கோன் புரிந்த போர்களைக் கூத்தரைப்போலவே சாஸனங்களும் மிகுதியாகக் கூறுதல் ஒப்பிடத்தக்கது.

இனி, தொண்டைமான் என்பது, தொண்டைநாட்டார்க்குத் தலைவன் என்ற பொருளுடையதாதலின், அங்ஙனந் தலைவராயினார் பலர்க்கும் வழங்கக் கூடியதேயாம். கருணாகரனுக்கு அச்சிறப்புப்பெயர், அவன் தொண்டைநாடாண்ட பல்லவமரபினனாதலால் வழங்கியதென்பதும், காலிங்கராயனுக்குத் தொண்டைமண்டலத்தில் அவன் தலைவனாயிருந்தமையால் வழங்கியதென்பதும், அவ்விருவகையார்க்கும் தொண்டைநாட்டின் பழைய தலைநகரங்களையும் உரிமையாக்குதல் கவிமரபென்பதும் அறியத்தக்கன.

அடுத்து, அருளாகரன் என்ற சிறப்புப் பெயரைச் சாஸனங்கள் காலிங்கராயனுக்கு வழங்குமுறையை நோக்குமிடத்து, அஃது, அவன் கருணாகரனின் வேறானவன் என்பதனையே தெளிவாக்குகின்றது. அருளாகரப்பெயரும் கருணாகரப்பெயரும் ஒருவனே கொண்டனவாயின், சாஸனத் தமிழ்ப்பாடல்களில் மணிப்பிரவாளத்தொடராக அருளாகரன் என்ற பெயரை அமைத்துப் பாடுதல் ஏற்குமாயினும், அதன் வடமொழிச் சுலோகப்பகுதியுள், கருணாகரன் என்ற வடதொடரையே

* "கடன்மலைநாட்டுள், சாவே றெல்லாந் தனிவிசும் பேற, மாவே றியதன் வருதினித் தலைவரைக், குறுகலர் குலையக் கோட்டா றுட்பட, நெறிதொறு நிலைகளிட் டருளி" என்ற அபயன் மெய்க்கீர்த்தியால், சாவேறுகளின் செருக்கை யழித்தது, மலைநாட்டுக் கோட்டாற்றுப்பக்கத்தென்பது விளங்கும்.

அமைத்திருத்தல்வேண்டுமென்றே? ஏதோ நிர்ப்பந்தமிருந்தாலன்றி, வடதொடரான கருணாகரப்பெயரைவிட்டொழித்துத் தமிழ்கலந்த அருளாகரப்பெயரைச் சாஸனசுலோகங்கள் ஆள நியாயமேயில்லையாம். அதனால், பல்லவனான வண்டைக்கருணாகரனின் வேறுபிரித்து மணவில் அருளாகரனைக் காட்டும் நோக்கத்தாற்றான் அச்சுலோகங்களில் தமிழ்கலந்த அத்தொடர் வழங்கப்படலாயிற்று என்று கருதல் தகுமெனக.

மேற்கூறிப்போந்த பிரபல காரணங்களாலும் பிரமாணங்களாலும் ஸமுத்திரத்நஹாரஞ்செய்த காலிங்கராசரும், அபயன்சேனாபதிகளுள் ஒருவனான மணவிற் காலிங்கராயனும், அவன் பிரதமசேனாபதியான வண்டைக் கருணாகரனும் மூவேறு தலைவர்களே என்பதும் அம்மூவரையும் ஒருவராக முடிப்பதற்கு ஆதாரமில்லையென்பதும் தெளிவாகத் தக்கன.

இனிக் கலிங்கத்துப்பரணிப் பிரதிகளிலும், தண்டியலங்காரமேற் கோள்களிலும் கலிங்கப்போரையும் கருணாகரனையும்பற்றிக் காணப்படும் பழம்பாடல்களைக் குறிப்பிட்டுவிட்டு இவ்வுபந்யாசத்தை முடிக்கின்றேன்.

*"தடங்குலவு நாண்மாலைத் தாமத்தன் கையில்
விடங்குலவு வெள்வாள் விதிர்ப்ப—நடுங்கியதே
கோண்மேவு பாம்பின் கொடுமுடிய தல்லவோ
வாண்மேவியகலிங்கர் மண்"† (கலிங். பரணிப்பிரதி).

*"சரநிரைத் தாலன்ன தண்பனி தூங்கத் தலைமிசைச்செங்
கரநிரைத் தாரையுங் காண்பன்கொ லோகலிங் கத்துவெம்போர்
பொரநிரைத் தார்விட்ட வேழமெல் லாம்பொன்னி நாட்டளவும்
வரநிரைத் தான்றொண்டை மான்வண்டை மாநகர் மன்னவனே" (ஷை).

"ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்துவட நாடர்
அருவ ரருவரென வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தீ யென்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது" (தண்டி. 103.)

---

*இக்குறியுள்ள பாடல்களிரண்டும், சென்னை 'மியூஸியம்' கையெழுத்துப் புத்தகசாலையிலும், தஞ்சைச் சரச்சுவதிமாலிலும் உள்ள பரணிப்பிரதிகளின் இறுதியிற் கண்டவை.

†'மன்' என்றும் பாடம்.

"கோட்டந் திருப்புருவங் கொள்ளா வவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி—நாட்டஞ்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கஞ்
சிவந்தன செந்தீத் தெற" (தண்டி. 76).

"கடத்தான் மாரியுங் கண்ணுறல் வெயிலும்
நிரைவயிரக் கோட்டா னிலவுஞ்—சொரியுமால்
நீளார்த் தொடையதுல னேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்" (ஷை. 58).

---

ஸ்ரீ:

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

# இருபத்துநான்காம்வருடக்
# கொண்டாட்ட நிகழ்ச்சிவிவரம்.

நிகழும் குரோதனஹு வைகாசிமீ ௨௬, ௨௭ ௳களில் நம மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் இருபத்துநான்காம் வருடக்கொண்டாட்டம், இம் மதுரைமாநகரில், சேதுபதி உயர்தரக்கலாசாலைக் கட்டடத்தில மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ௨௬௳ மாலை ௫-மணிக்கு ஸபைகூடியது. அதற்கு, சென்னை எக்ஸிக்யூட்டிவ் கௌன்சில் மெம்பர் கனம்பொருந்திய ஸ்ரீமான். ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் K. C. I. E. அவர்கள், இச் சங்கத்தின் சாசுவத அக்கிராசனாதிபதியாகிய மாட்சிமைதங்கிய இராஜ ராஜேஸ்வர முத்துராமலிங்கசேதுபதிமன்னரவர்கள், சிங்கம்பட்டி ஜமீந்தாரான மகா-ள-ள-ஸ்ரீ சங்கர சிவசுப்பிரமணிய தீர்த்தபதிராஜா அவர்கள், இராமநாதபுரம் ஜில்லாகலெக்டர் ஸ்ரீமான் ராமமூர்த்தி அவர்கள், மதுரை முனிஸிபல்சேர்மென் R. S. நாயுடு அவர்கள், மதுரை வக்கீல்களான K. ராமையங்காரவர்கள், சோமசுந்தரபாரதியவர்கள், T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், ராவ் ஸாஹிப். M. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள், V. S. ராமஸ்வாமிசாஸ்திரியவர்கள், N. R. கிருஷ்ண ஸ்வாமி ஐயங்காரவர்கள், R. கணபதி ஐயரவர்கள் முதலிய கனவான்களும், மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள், ஸேதுஸம்ஸ்தான வித்வான். ரா. இராகவையங்காரவர்கள், ஸ்வாமி விபுலாநந்தரவர்கள்,

சென்னை லெக்ஸிகன்கமிட்டியின் பிரதமதமிழ்ப்பண்டிதர் மு. இராகவையங்காரவர்கள், மகிபாலன்பட்டி வித்வான் மு. கதிரேசச்செட்டியாரவர்கள், செந்தமிழ்ப்பத்திராதிபர் திரு. நாராயணையங்காரவர்கள், தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகர் சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள், தேவகோட்டைச்சிவாகமசித்தாந்தபரிபாலனசங்க வித்வான் பொ. முத்தையபிள்ளையவர்கள், இராமேசுவரதேவஸ்தானபாடசாலைத்தலைவர் சுந்தரசாஸ்திரிகள், நாகபட்டணம் ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் V. முத்துஸாமிஐயர் M.A.L.T அவர்கள், விருதைச்சிவஞானயோகிகள், திருநெல்வேலி ஹிந்துகாலேஜ் தலைமைத்தமிழாசிரியர் மே. சொ. சுப்பிரமணியக்கவிராயரவர்கள், திருச்சி நேஷனல்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம. கோபாலகிருஷ்ணையரவர்கள், தமிழ்ச்சங்கக்கலாசாலை யுபாத்தியாயர்களான பண்டித சு. ஹரிஹரையரவர்கள், நல்லசிவன்பிள்ளையவர்கள், மதுரை அமெரிக்கன்மிஷன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஆ. கார்மேகக்கோனாரவர்கள், மதுரைக்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், சோதுகுடி ஸாஹிப் பஹதூர் M.K.M. அப்துல்காதிறுராவுத்தரவர்கள், இராமநாதபுரம் மஹாராஜா ஹைஸ்கூல்தமிழ்ப்பண்டிதர்களான திருஞானசம்பந்தக்கவிராயரவர்கள், சிவஞானம்பிள்ளையவர்கள், பசுமலை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் நே. ரா. சுப்பிரமணியசர்மா அவர்கள், கீழைச்செவல்பட்டி வ. மு. இரத்தினேசுவரையரவர்கள் முதலிய வித்வான்களுமான உள்ளூர்வாசிகளும் வெளியூர்வாசிகளும் விஜயம் செய்திருந்தனர்.

முதலில் இராமநாதபுரம் மஹாராஜா ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் திருஞானசம்பந்தக்கவிராயரவர்கள் கடவுள்வாழ்த்துப்பாடினார்கள். அதனபின், தமிழ்ச்சங்கக்கலாசாலையுபாத்தியாயர் பண்டித ஸ்ரீமத். ஹரிஹரையரவர்கள், ஷை கலாசாலையுபாத்தியாயர் ஸ்ரீமத். நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றிய மங்களவாழ்த்துப்பாடலைப் படித்தார்கள்.

அதன்மேல் ஸபையாரின்சார்பாக, மாட்சிமைதங்கிய ஸேதுபதி மன்னரவர்கள், கனம். ஸி. பி. இராமஸ்வாமி ஐயரவர்கள் தகுதியை எடுத்தியம்பி அவர்களை அக்கிராஸனராயிருக்குமாறு வேண்டினார்கள். ஸ்ரீமத். K. ராமையங்காரவர்கள் அதனை ஆமோதித்தும், கனம் ஐயரவர்

களுக்குச் சமீபத்தில் K.C.I.E. பட்டம் கிடைத்ததைப்பாராட்டியும் இன்னுரைகூற ஐயரவர்கள் அக்ராஸனத்தமர்ந்தார்கள்.

பின்னர், சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமான். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களால் ஸ்ரீலஸ்ரீ திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர், மாட்சிமைதங்கிய சிவகங்கையரசரவர்கள், தொட்டப்பநாயக்கனூர் ஜமீந்தாரவர்கள், சென்னைத்துரைத்தன வித்யா இலாகா அமைச்சர் கனம். ஸர். பாசுராமதாஸ்பாத்ரோ அவர்கள், சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமத். V. V. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், மதுரை ஜில்லாஜட்ஜ் ரெயிலிதுரையவர்கள், ஸர். M. C. T. முத்தையாசெட்டியாரவர்கள், சீர்காழி K. சிதம்பரநாதமுதலியாரவர்கள், தஞ்சை ராவ்பஹதூர் K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள், தேவகோட்டை மெ. அரு. நா. இராமநாதன்செட்டியாரவர்கள், இராமநாதபுரம்ஜில்லாவின் கல்விஇலாகா அதிகாரி C. S. சுந்தரமையரவர்கள், தமிழ் மஹாபாரதப் பதிப்பாசிரியர் ம. வீ. ராமாநுஜாசாரியாரவர்கள், சென்னை தமிழ்லெக்ஸிகன்கமிட்டியின் தலைவர் C. P. வேங்கடராமையரவர்கள், சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் இ. வை. அநந்தராமையரவர்கள், எட்டயபுரம் மஹாலிங்கையரவர்கள், சேலம் K. T. பால் அவர்கள், சென்னை பஞ்சாமிர்தம் பத்திராதிபர் மாதவையரவர்கள், யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் பரமேசுவரகாலேஜ் தமிழ்ப்பண்டிதர் K. S. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள், குளித்தலை போர்டுஹைஸ்கூல் தலைமையுபாத்தியாயர் K. இராமசந்திரையரவர்கள் முதலியோர் சங்கக்கொண்டாட்டத்துக்கு வரமுடியாமையை அறிவித்து, தமிழ் நன்கு சிறந்து வளம்பெறவும் சங்கக்கூட்டம் இனிது நடைபெறவும் பிரார்த்தித்து வாழ்த்தியனுப்பிய தந்திகளும், கடிதங்களும், சங்கத்தின் இருபத்துநான்காமவருட அறிக்கைப்பத்திரமும் படிக்கப்பட்டன.

அதன்பின், சங்க ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷையில் ஸ்கூல்பைனல் வகுப்பில் முதற்றரத்திற்றேறியவருள் ஒருவரான குளித்தலை போர்டு ஹைஸ்கூல் மாணவர் A. V. கோவிந்தன் என்பவருக்கு அக்ராஸனாவர்கள் பரிசுவழங்கினார்கள்.

அதன்மேல் சேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத், ரா. இராகவையங்காரவர்கள், தமிழின் பழமை பெருமைகளையும், "வீயாத்தமிழுடை

யான் பல்வேற்கடற்றுனைப்பாண்டியன்" என்று புலவர் புகழும்வண்ணம் அதனை முன்பு பாண்டியரும், பின்பு சேதுபதிகளும் புரந்தமுறைமையையும், இத்தகைய தெய்வச்செந்தமிழ்மொழியிற சங்கத்தார்களாற் செய்யப்பட்ட பல பழந்தமிழ்நூல்கள் செல்வாய்ப்பட்டிறந்தொழியாது ஆராய்ந்து அச்சிட்டளித்துப் பேருதவிபுரிந்த ப்ரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள் தகைமையையும் இனிது விளக்கி, ஐயரவர்கள் தமிழுலகுக்குச்செய்துவரும் நன்றியைநினைந்து அவர்களுக்கு இச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியும், தமிழ்வளர்ச்சியில் மிக்கவிருப்பமுடையவருமான ஸ்ரீமான். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் செய்தநன் முயற்சியால் தமிழ்நேயச்செல்வர்கள் ஒருபெரும்பரிசு (ரூபா ஐயாயிரம் அடங்கிய பொற்கிழியொன்று) அளிக்க முன்வந்ததைப் பற்றிப் பாராட்டி, அப்பரிசையளிக்கும்படி அக்ராசனரை வேண்டிக் கொண்டார்கள்

பின்பு, மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீமத். மு. கதிரேசச்செட்டியாரவர்கள், தமிழ்ப்பாஷை உயர்ந்தஅபிப்பிராயங்களையுடையதென்றும், தமிழ்ப்புலவர்களைக் கடவுளரும், அரசரும், பிரபுக்களும் ஆதரித்து வந்ததை நூல்களால் அறியத்தகுமென்றும், தமிழ்நூல்களை ஆராய்ந்து வெளியிடுவார் நூலுரைபோதகாசிரியராயிருக்கவேண்டுமென்றும், நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியர்திறமனைத்தும் மஹாமஹோபாத்யாய ஐயரவர்களிடம் பொருந்தியுள்ளனவென்பது மணிமேகலைப்பதிப்பொன்றாலேயே அறியத்தகுமென்றும், பழந்தமிழ்நூல்கள் சிலவற்றை வேறுசிலரும் அச்சிட்டார்களெனினும், அவை இவர்களச்சிட்டபின்பே திருத்தமடைந்தன என்றும், தமிழ்ப்புலவர்க்குக்கொடுத்தல் தமிழ்த்தெய்வத்தை அர்ச்சித்தலாகுமென்றும், ஆதலால் மஹாமஹோபாத்யாய சாமிநாதையரவர்களுக்கு இப்பரிசை நல்கும்படி அக்கிராசனரவர்களைத் தாமும் வேண்டிக்கொள்வதாகவும் கூறினார்கள்.

அதன்மேல், மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் விஷயமாக மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையுபாத்தியாயர் ஸ்ரீமத். சு. நல்லசிவன் பிள்ளையவர்கள் இயற்றிய மங்களவாழ்த்துச்செய்யுளை இராமநாதபுரம் மஹாராஜா உயர்தரகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். திருஞானசம்பந்தக்கவிராயரவர்கள் படித்தார்கள்.

பின்பு இச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியும் இப்பரிசு வழங்குவதற்குவேண்டும் பொருள் தொகுத்தவரும் ஆன ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், இவ்விசேஷ ஸம்மானஞ்செய்யும்படி பொருளுதவி புரிந்தகனவான்களின் பெயர்முதலிய விவரங்களை ஸபையார்க்குத் தெரிவித்து அவர்களது உதவியைப் பாராட்டினார்கள்.

அதன்மேல், ஸ்ரீ காஞ்சீ காமகோடிபீடாதிபதிகளான கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகள் மஹாமஹோபாத்யாய ஐயரவர்களுக்கு தக்ஷிணகலாநிதி என்ற பட்டத்துடன் அளிக்கும்படி அனுப்பிய ஜோடி சால்வையும், தங்கத்தோடாவும் பைம்பொற் பவுண்டன்பேனவும், மந்த்ராக்ஷதை விபூதிப்ரஸாதங்களும் ஸ்ரீமுகமும்வந்தன. ஸ்ரீமுகத்தை மதுரைவக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ V. S. ராமஸ்வாமிசாஸ்த்ரியவர்கள் ஸபையிற்படித்துக்கொடுக்க, ஸபாநாயகரவர்கள்,

'செந்நாப் புலவர் திறமறிந்து பொற்கிழிகள்
அந்நாளிக் கூட லளித்தமைநந்—தொன்னூல்கள்
கற்றறிந்தோம் மற்றதனைக் கண்ணாரக் கண்டறிந்தோம்
இற்றைநா ளிங்கே யினிது"

என்று புலவர் பாராட்டும்வண்ணம், தமிழபிமானச் செல்வர்கள்வழங்கிய ரூபா ஐயாயிரம் அடங்கிய பொற்கிழியையும், ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகள் வழங்கிய தக்ஷிணகலாநிதி என்றபட்டத்தையும், சால்வை முதலியவற்றையும் மஹாமஹோபாத்யாய ஐயரவர்களுக்கு உவப்புடன் அளித்தார்கள்.

அதன்பின் மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் தம்மைக் கௌரவித்தமைக்கு நன்றிபாராட்டி, தமிழ்மொழியைக் கௌரவிக்கவேண்டியே தமக்கு இந்த விசேஷசம்மானஞ்செய்யப்பட்டதென்று தாம் கருதுவதாகக்கூறினார்கள்.

அதன்பின் ஸபாநாயகரவர்கள், "நேற்றுமாலையில் ஸ்ரீமான். மஹாமஹோபாத்யாய சாமிநாதையரவர்களும், T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களும் இன்று நான் தமிழிற் பேசவேண்டுமென்று என்னிடங் கேட்டுக் கொண்டதினிமித்தம் இன்று தமிழிற் சிறிதுபேசுகிறேன்; பின்பு, ஆங்கிலத்திற் சிறிதுபேச என்னை அநுமதிக்கவேண்டுகிறேன். நான்

ஆங்கிலம், ஸம்ஸ்க்ருதம், பிரஞ்சு, ஜெர்மன், இட்டலி முதலிய பாஷைகளை நன்குகற்றேனெனினும், தமிழ்ப்பாஷையையும் அவ்வாறு கற்க இயலாமற்போனமைக்கு வியசனிக்கிறேன். ஆனால் இச் சங்கவிழாவிற் சபைத்தலைமைவகித்த பாக்யமானது இனி யான் தமிழ்ச் சுவையை இனிதருந்தச்செய்யுமென நிச்சயமாய் நம்புகிறேன்'' என்று முதலில் தமிழிற்பேசிவிட்டுப் பின்பு ஆங்கிலத்தில் "இத்தேசத்தில் பொதுவாக எக்காரணத்தாலோ ஜாதிகளில் உயர்வுதாழ்வுகள் கற்பிக்கப்பட்டுள்ளன. உண்மையாக ஆராய்ந்துநோக்கின் அவ்வாறில்லையென்பது விளங்கும். ஆடம்பரமற்றவாழ்வும் நன்னடையும் மேலான எண்ணங்களுமே ஒருவனை உயர்ந்தநிலைமையுடையனாகச் செய்யும். இவற்றையுடையவனே பிராமணன். இவற்றையுடையவனவே றெந்த ஜாதியிற் பிறந்தவனாயினும் பிராமணனாகவே மதிக்கத்தக்கவன் ஆவன். தமிழ்த்தெய்வத்துக்குப் பிராமணரும், பிராமணரல்லாதாரும் மற்றுமுள்ளாரனைவரும் தொண்டுசெய்துவருவது உலகம் அறிந்ததே. தமிழ்ப்பாஷையின்சரித்திரத்தைச் சற்று ஆராய்ந்துபார்க்கும்போது மிகவும் ஆச்சரியம் உண்டாகிறது. தமிழ்ப்பாஷைக்குள்ள அபூர்வ உரிமைகள் வேறு எந்தப்பாஷைக்கும் இல்லையென்பதை நான் என் அநுபவத்திற் கண்டறிந்திருக்கிறேன். தமிழ்ப்பாஷை இதரபாஷைகளைக்காட்டிலும் இனிமையும் சொல்வன்மையும் பொருந்தியதே. இதனினிமையை ஹீப்ரூபாஷையையும் க்ரீக்பாஷையையும் சேர்த்தால் ஏற்படும் இனிமைக்கு ஒப்பிடலாம் என நினைக்கிறேன். தமிழ்ப்பாஷையை மிகுந்த உற்சாகத்தோடு அபிவிருத்திசெய்து நிலைநாட்டிவரும் இத்தமிழ்ச்சங்கத்தின் வேலைகள் மிகவும் போற்றத்தக்கன. இச்சங்கம் தமிழபிவிருத்திகருதிச் சென்றவருடங்களிற்செய்த நூலாராய்ச்சி முதலியவற்றைக்காட்டிலும் இனிவரும்வருடங்களில் ஊக்கத்துடன் பன்மடங்கு செய்துவருமென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. மேலும், இத்தமிழ்ச்சங்கத்தார் ஒரு செந்தமிழ்க்கலாசாலையை நடத்தி, அதனால் பலமாணவர்கள் தமிழில் தேர்ச்சிபெறுமாறு செய்துவருவது கேட்டு நான் மிக்க மகிழ்வெய்தினேன். ஒருபண்டிதன் தான் எங்குச் சென்றாலும் தன் கல்வியுடனே செல்கிறான்; சென்ற இடங்களில் அவகாசம்நேரும் போதெல்லாம் தான் கற்ற கலைகளைப் பிறர்க்கும் உபதேசிக்கிறான். இத்தகைய பண்டிதர்கள் தேர்ச்சிபெறும் இதுபோன்ற சங்கங்கள் தமிழ்

நாட்டுக்கு இன்றியமையாதவை. இவ்வாறு தமிழ்த்தாய்க்குத் தொண்டு புரியும் ஒவ்வொருசங்கத்தையும் நன்கு அபிவிருத்திசெய்யவேண்டுவது தமிழ்மக்களின் கடமையாகும். தமிழ்ப்பாஷையும் தமிழ்நாடும் முன்னேற்றமடையவேண்டுமானால் நம்முன்னோர்கள் அவற்றை எவ்வாறு விருத்திசெய்தார்களோ அவ்வாறே நாமும் விருத்திசெய்யவேண்டும். நம்நாட்டை நாமே சீர்திருத்த முயலவேண்டும். பிறநாட்டாரின்வழிகளையும் ஒழுக்கவழக்கங்களையும் விட்டொழித்து நம் நாட்டு முன்னோரின் வழிகளையும் ஒழுக்கவழக்கங்களையும் பின்பற்றி நடந்தால் நம்நாடும் நமது பாஷையும் நீடூழி நன்றாகவாழும் என்பதற்கு ஒருசிறிதும் ஐயமில்லை. பழந்தமிழ்நூல்கள்பலவற்றைப் பிழையறப் பரிசோதித்துப் புத்தகரூபமாக அச்சிட்டு வெளியிட்டுத் தமிழ்த்தாய் புத்துயிர்பெற்றெழச்செய்த ஸ்ரீமான் மஹாமஹோபாத்யாய சாமிநாதையரவர்களுக்கு உங்கள்சார்பாக என் மனமார்ந்தவந்தனத்தைச் செலுத்துகிறேன்" என்று ஸபையோர் வியந்து மகிழும்படி உபந்யஸித்தார்கள்.

அதன்பின் மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் ஸபாநாயகர்க்கு மாலைசூட்டவும், மதுரைவக்கீல் ஸ்ரீமத். சோமசுந்தரபாரதியவர்கள் ஸபாநாயகர்முதலியோர்க்கு வந்தனோபசாரங்கூறவும், திருச்சி நேஷனல் காலேஜ்தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் தாமியற்றிய வாழ்த்துக்கவிகளைப் படிக்கவும் இரவு ௯ மணிக்கு ஸபை இனிது நிறைவெய்தியது.

௨௭௨ காலை ௯ மணிக்கு மீண்டும் ஸபை கூடியது. மதுரை வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ K. ராமையங்காரவர்கள் ஸபையாரின் சார்பாக வேண்டிக்கொண்டதற்கிசைந்து, சேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்கள் ஸபாநாயகராகவீற்றிருந்து சுருக்கமும் விளக்கமும் இனிமையும் உடையதாக முன்னுரை கூறினார்கள்.

அதன்பின், சென்னை லெக்ஸிங்கன் யுனிவர்ஸிட்டியின் பிரதான தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்கள், தாம் பலசாதனங்களாலாராய்ந்தெழுதிய 'காஞ்சைக் கொண்டைமான்' என்ற வியாசத்தைப் படித்தார்கள். அதன்மேல் சுவாமி விபுலாநந்தரவர்கள், "சேவற்கொடியும் வாகைத்திணையும்" என்ற விஷயமேற்கொண்டு உபந்யஸிக்க, அக்ராஸந

ரவர்கள் ந... ...ங்யாசங்களைப்பற்றித் தமது அபிப்பிராயத்தை வெளி யிட்டார்கள் ...னர், சங்கக்காரியநிர்வாகஸபை நடைபெற்றது. இவ்வளவிற் ...க்கூட்டம் நிறைவெய்தியது.

உ...சஇ மணிக்கு மறுபடியும் ஸபைகூடியது. வே. முத்து ஸாமிஐயர், M.A.L.T. அவர்கள், "திருவள்ளுவர்குறித்த அரசியல்" என்ற விஷயத்தையும், வ. மு. இரத்தினேசுவரையரவர்கள் "தமிழின் ஆற்றல்" என்ற விஷயத்தையும், சோதுகுடி M. K. M. அப்துல் காதிறு ராவுத்தரவர்கள் 'அறம்' என்றவிஷயத்தையும், பொ. முத்தைய பிள்ளையவர்கள் 'திருக்குறள் முதற்பாவின் ஆராய்ச்சி' என்ற விஷயத் தையும், ஆ. ...மேகக்கோனாரவர்கள், 'பெருஞ்சித்திரனார்' என்ற விஷயத்தையும், மகிபாலன்பட்டி வித்வான் மு. கதிரேசச்செட்டியா ரவர்கள் 'கம்பரும் பாஸனும்' என்ற விஷயத்தையும், திருநெலவேலிச் சிதம்பரம்பிள்ளையவர்கள் 'தமிழ் ஸம்ஸ்க்ருதச் சொன்னயம்' என்ற விஷயத்தையும், விருதைச் சிவஞானயோகிகள் 'சித்தவைத்தியம்' என்ற விஷயத்தையும், ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் 'ஆங்கிலக்கருத்துக் கட்கியைந்த தமிழ்ப்பாத்தொகை' என்ற விஷயத்தையும்பற்றி உபந்ய ஸித்தார்கள். பின்பு, நடந்த உபந்யாஸங்களில் ஒவ்வொன்றையும்பற்றி அக்கிராஸநரவர்கள் தமது அபிப்பிராயத்தைக் கூறினார்கள். அதன் மேல், சங்கக்காரியதரிசியவர்கள் அக்கிராஸநர் முதலியோர்க்கு வந்தனோபசாரங்கூற இரவு ௯ மணிக்கு மாலைக்கூட்டம் நன்கு நிறை வெய்தியது. சுபம்.

வாழிய ஜார்ஜ் மஹாராஜ ராஜேசன
வாழிய சேது வளநாடன்—வாழிபல
வாழி தமிழ்ச்சங்க மன்னு புலவர்குழாம்
வாழிசபாநாதர் மகிழ்ந்து.

---

T K இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராதிபர்.

# திருக்குறளையங்கள்

[பரிமேலழகருரைப்பதிப்புப்பற்றிநிகழ்வன.]

சேந்தமிழறிஞர்களே!

௧. ௪௦௨-வது குறளின் விசேடவுரையில் 'உறுப்பென்பது எண்டிலக்கணையடியாகவந்த குறிப்புச்சொல்' என்றிருக்கிறது. அவயவம் என்னுஞ் செம்பொருளுடையதாகவேவந்த அச்சொற்கு அவ்விலக்கணம் பொருந்துவது எப்படி? இனிமை யென்றபொருளில்வருவதாய் இப்பாட்டில் இனியதென்று பொருள்கொள்ளப்பட்ட உப்பு என்ற சொற்கு இவ்விலக்கணம் பொருந்துவதன்றோ? பொருந்துவதாயின் உறுப்பென்பது உப்பெனத் திருத்தப்படவேண்டுவதன்றோ? இதன் உண்மை யாது?

௨. ௪௫௨-வது குறளில் 'இனத்தியல்பு அதாகும்' எனப் பதங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அது ஆகும் என்பன 'அதாகும்'எனப் புணர்ந்ததென்றல் பரிமேலழகர்க்கு உடன்பாடன்று. அது, 'அதுணர்வார்' 'வாளதுணர்வார்' என்ற ௨௫௭, ௩௩௪-ம் குறள்களின் தொடர்கள்பற்றி அவர் கூறிய இலக்கணங்களால் அறியக்கிடக்கின்றது. அன்றியும், 'அறிவு இனத்தின்றன்மைத்தாம்' என்றபொருளுக்கு இனத்தியல்பது ஆகும் அறிவு என்னும் பதங்களே வேண்டப்படுவன. அதனால் இனத்தியல்பது, ஆகும், அறிவு என்று பிரித்தலே பொருத்தம் என்றெண்ணுகிறேன். இதன் உண்மை யாது?

௩. ௧௧௫௨-வது குறளின் விசேடவுரையிலுள்ள 'பண்டையிற் சிறப்பால்' என்பது பொருள்நயத்திற்கும் இலக்கணவமைதிக்குமேற்பப் 'பண்டையில் சிறப்பா' லென விருத்தல்வேண்டுமன்றோ?

சத்தியவாகீசவையர்.

---

ஸ்ரீ:

# மதிப்புரை.

—:(o):—

கலித்தொகை (இரண்டாம் சம்புடம்—மருதக்கலியும் முல்லைக் கலியும்; நச்சினார்க்கினிய ருரையுடன்):— அகப்பொருட்பாடல்களாலமைந்த இவ்வரும்பெருந்தமிழ்நூலையும் அதன் உரையையும், சென்னை பிரஸிடென்ஸிக் காலேஜின் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். இ.வை. அனந்தராமையரவர்கள் செவ்விதின் ஆராய்ந்து முதலில் பாலைக்கலியும் குறிஞ்சிக்கலியும் அச்சிட்டு ஒரு சம்புடமாகக் வெளியிட்டார்கள். இப்பொழுது அவர்களால் மருதக்கலியும் முல்லைக்கலியும் அச்சிடப்பட்டு இரண்டாஞ்சம்புடமாக வெளிவந்திருக்கிறது. இது, முதற்சம்புடத்தினும் பலவகையானும் சிறந்து விளங்குகின்றது. முதற்சம்புடத்திற் காட்டினும் இதில் ஆராய்ச்சிசெய்யப்பட்ட நூல்கள் அதிகப்பட்டுள்ளன. இதன் ஆராய்ச்சிக்குறிப்பில் இலக்கிய இலக்கணநெறிகளால் அடிப்பட்டு வழங்கிவரும் அருமையான தனிமொழி, தொடர்மொழி, மரபு, உவமம், பொருள் முதலிய பலவற்றிற்கும் பல பல மேற்கோள்காட்டியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. சங்கநூல்பயில்வார்க் கின்றியமையாத பழந்தமிழ்நூல்வழக்குப் பலவும் இதன் ஆராய்ச்சிக்குறிப்பால் நன்கறியலாகும். இவ்விரண்டாஞ் சம்புடத்தின் விலை ரூபா ஐந்து. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் ஸ்ரீமத். இ. வை. அநந்தராமையரவர்கள், பிரஸிடென்ஸிக்காலேஜ் தமிழ்ப்பண்டிதர், 16. நாகப்பையர்தெரு, திருவல்லிக்கேணிப்போஸ்டு, சென்னை என்ற விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

முப்பானூற்சுருக்கம்:—இது, யாழ்ப்பாணம் கோப்பாய் ஸ்ரீமான். வி. வேலுப்பிள்ளையவர்களால் பெரிதும் திருக்குறளைப் பின்பற்றிப் பிறநூன் முடிபுகளுள்ளும் ஆங்காங்கு வேண்டுவன கூட்டிச் செவ்விய நடையில் விரித்து எழுதப்பட்டது. இதில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பால்வகைகளும் அடங்கியுள்ளன. இதில், அறம் பொருளின்பம்பற்றி ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள

வேண்டிய விடயங்கள்பலவும் நன்குவிளங்குமாறு உரைநடையிற் றொகுத்தெழுதியிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது. உயர்தரக் கலாசாலை மாணவர்களுக்கு வசனபாடமாகவைத்துக் கற்பித்தற்கு மிக வாய்ப்புடையது. இதன் விலை ரூபா மூன்று. வேண்டுவோர் V. கதிர்வேலு (Assistant Inspector of Schools, Slave Island, Colombo) அவர்களுக்கு எழுதிப் பெறலாம்.

தத்துவப்பிரகாசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத்திரயநிர்ணயம் என்பவற்றின் மூலமும் விரிவுரையும்; தமிழ்மொழிபெயர்ப்பு:—இப் புத்தகம், தேவகோட்டைச் சிவாகமசித்தாந்த பரிபாலனசங்கத்தின் ஸம்ஸ்கிருதபண்டிதர் ப்ரும்மஸ்ரீ நா கிருஷ்ணசாஸ்திரிகளால் வடமொழியினின்றும் தமிழில் தெளிவான வசனநடையில் மொழிபெயர்க்கப்பட்டு, ஷை சங்கத்தின சித்தாந்தசாஸ்திர போதகர் ஸ்ரீமத். போ முத்தையபிள்ளையவர்களால் பரிசோதிக்கப்பட்டு, ஷை சங்கத்தாரால் அச்சிடப்பெற்றிருக்கிறது. இப்புத்தகம், சைவசமயசித்தாந்த தத்வங்களையும் அவற்றின் இயல்புகளையும் மேற்கோள் ஏது முதலியவற்றால் ஆராய்ந்து விளக்குவது. இந்நூல்களின் வரலாறு முதலியன நன்குணருமாறு முகவுரை யெழுதப்பட்டிருக்கிறது. இதன்விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் காரியதரிசி, சிவாகமசங்கம், தேவகோட்டை என்ற விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

தக்ஷிணசரித்திரவீரர்:—இது பஞ்சாமிர்தம் பத்திராதிபர் ஸ்ரீமத் அ மாதவையரவர்களால் எழுதப்பட்டது. இதில், தளவாய் அரியநாதமுதலியார், மைசூர் ஹைதர்ஆலி, கான்சாயபுகம்மந்தான் என்னும் மூன்றுவீரபுருஷர்களின் சரித்திர உண்மைகளைக் கதைப் போக்குக்குரிய கட்டுரைகளால் முரணுறாமல் மாணவர்கள் படித்தற் கேற்ற தெளிவானவசனநடையி லெழுதியிருப்பது திருப்திகரமாயிருக்கிறது. இதன் விலை அணு பத்து. வேண்டுவோர் மானேஜர், பஞ்சாமிர்தம் ஆபீஸ், மயிலாப்பூர் என்ற விலாசத்திற் பெறலாம்.

இராமகிருஷ்ணமிருதம்:—இது, சேரன்மாதேவிக் குருகுலாசிரமம் ஸ்ரீமத். சுத்தாநந்தபாரதியவர்களால் ஸ்ரீமத். ராமகிருஷ்ணபரமஹம்ஸரின் பிரபாவங்களையும உபதேசப்பொருள்களையும் விஷயமாகக்

கொண்டு பலபகுதிகளாகப் பாடப்பட்டதொரு பிரபந்தம். இதனை யிடையிடையே பார்த்தமட்டில் விஷயங்கள் சிறந்தனவாகக் காணப்படுகின்றன. இதன் விலை அணா ஆறு. தபாற்கூலிவேறு. வேண்டுவோர் ஆக்கியோரிடம் பெறலாம்.

**இரண்டுபக்தசிரோமணிகள்:**—(1. மாணிக்கவாசகர் சரிதம், 2. ஸ்ரீராமதாசர்சரிதம்):—இவை, வரகவி ஸ்ரீமத். திரு. அ. சுப்பிரமணிய பாரதியவர்களால் நடுத்தரக் கலாசாலைமாணவர்கள் படிப்பதற்குபயோகமாம்படி தெளிவான தமிழ்நடையில் எழுதப்பட்டன. இவ்விரண்டுங்கூட்டி ஓரேபுத்தகமாக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா எட்டு. வேண்டுவோர் மாடர்ன் பப்ளிஷிங்ஹௌஸ், திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

**நவமணித்திரள்:**—இது, சிவகெங்கை ராஜாஸ்ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத். கே. சுப்பராவ் அவர்களால் எழுதப்பட்டது. இதில், முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பது தொடக்கமாக முப்பத்துமூன்றுவிடயங்கள், திருக்குறள் மேற்கோள்களும், அவ்வவற்றிற்கேற்ற இதிகாசங்களும் காட்டி நன்றாக விரித்தெழுதப்பட்டுள்ளன. இதன் விலை அணா எட்டு. வேண்டுவோர் மாடர்ன் பப்ளிஷிங்ஹௌஸ், திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

**விஜயராகவன்:**—இது, ராஜாம்பாள் முதலிய சிறந்தநாவல்களெழுதிய ஸ்ரீமான் ஜே. ஆர். ரங்கராஜு அவர்களால் வெளியிடப்பட்டது. இதில் படிப்பவர்கள் விருப்புறும்படி பற்பலநீதிகளும், உலகவழக்கிலுள்ள பலபுறளிகளும் நன்கு புலப்படுத்தி எளியதமிழ் நடையில் நன்றாயெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா ஒன்று. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் ரங்கராஜு அண்டு பிரதர்ஸ், 50 வாலாஜாரோட், மவுண்ட்ரோட்போஸ்ட், சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

**காரைக்காலம்மையார்:**—இது, மன்னார்குடி பிண்ட்லேகாலேஜின் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் சேட்லூர் ஸ்ரீமத். அ. கு. ஸ்ரீநிவாஸையங்காரவர்களால், காரைக்காலம்மையார் சரித்திரத்தைச் சிறுவர் சிறுமியர்களும் படித்தறியும்படி மிகச்சுருக்காமலும் விரிக்காமலும் வேண்டிய

அளவில் நன்கு விளங்கும்படி யெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா ஐந்து. வேண்டுவோர் மாடர்ண் பப்ளிஷிங்ஹவுஸ், திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

குணவீரசிகாமணி அல்லது நடபின்பெருமை:—இது, தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் மே. வீ வேணுகோபாலப்பிள்ளையவர்களால், சிறுவர்களுக்குப் பயன்படுமாறு ஒரு பழையவிநோதக்கதையினின்று வேண்டுவனகொண்டு வேண்டாதன விலக்கிப் புது முறைபற்றிச் சந்திவிகாரங்களும் திரிசொற்புணர்ப்புமில்லாத தெளிவான நடையில் எழுதப்பட்டது. இதன் விலை அணா ஆறு. வேண்டுவோர் ஷை மாடர்ன் பப்ளிஷிங்ஹவுஸிற் பெறலாம்.

நாலடியார்:—இது, சங்கசிந்தாமணி ஆசிரியரும், அகநானூற்றுப் பதிப்பாசிரியருமான ஸ்ரீமத். வே. இராஜகோபாலையங்காரவர்களால் பலபிரதிகள்வைத் தாராய்ந்து, பரிப்பெருமாள் பதுமனார் இவர்கள் வரைந்த பழைய உரையைத்தழுவி யெழுதிய குறிப்புரையோடு நன்முக அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. குறிப்பகராதி முதலியனவும் எழுதிச்சேர்க்கப்பட்டுள்ளன. குறிப்புரை வேண்டுமளவில் பொருள் விளங்குமாறு தெளிவாயெழுதித் தனியே பிற்பகுதியாகச் சேர்க்கப்பெற்றிருக்கிறது. இதன்விலை ரூபா ஒன்றரை. வேண்டுவோர் ஸ்ரீமத். வே. இராஜகோபாலையங்காரவர்கள், கம்பர்விலாசம், மைலாப்பூர், சென்னை என்றவிலாசத்திற் பெறலாம்

ஊழியன்:—காரைக்குடியிலிருந்து ஸ்ரீமான். ராய. சொக்கலிங்கஞ் செட்டியாரவர்களால், வாரம் ஒருமுறை வெளியிடப்பட்டுவந்த தனவைசிய ஊழியன் என்ற பத்திரிகையானது, நாளது ஆனிமீ ௩௨ முதல் ஊழியன் என்றபெயருடன் பெரியவுருவமும் விரிந்தநோக்கமுமுடையதாய் வெளிவருவதையறிந்து மகிழ்கிறோம். நம் தமிழும், தமிழ்நாடும், தமிழ்நாட்டாரும், தமிழ்மக்களின் கல்வியறிவொழுக்க வழக்கமுதலியனவும், நன்னிலையடையுமாறு ப்ரசாரஞ்செய்தலே இதன்முக்யநோக்கமென்று தெரிகிறது. பலபத்திரிகைகள் தோன்றி ஆதரிப்பாரின்றி மறையும் இக்காலத்திற் செட்டியாரவர்கள் தம் விடாமுயற்சியாலும் தேசபாஷாபிமானமுதலியவற்றாலும் தாம் தொடங்கிய பத்திரிகையை உலகத்தார் நன்குமதிக்கும்வண்ணம் வளர்ச்சி

யடையச்செய்து தேசநலங்கருதி உழைத்துவருவது பாராட்டத்தக்கது. இதன்வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா ஐந்து. வெளிநாடுகளுக்கு ரூபா ஆறு. ஆறுமாதச்சந்தா ரூபாமூன்று. வேண்டுவோர் பத்திராதிபர், ஊழியன், காரைக்குடி என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

சைவசித்தாந்தபாநு:—இது, யாழ்ப்பாணத்திலிருந்து பண்டிதர் ஸ்ரீமத். S. நடராஜா அவர்களால் மாதம் இருமுறை வெளியிடப் பெறும் ஒரு வர்த்தமானப்பத்திரிகை. இதன்வருடச்சந்தா ரூ. மூன்று. வேண்டுவோர் S நடராஜா அவர்கள், சைவசித்தாந்தபாநு மானேஜர், நீர்வேலி, யாழ்ப்பாணம் என்றவிலாசத்துக்கு எழுதிக்கொள்க.

கொங்குமண்டலம்:—இது, திருச்செங்கோட்டினின்று மாதம் ஒருமுறை வெளிவருவது. கொங்குமண்டலத்தின் பழஞ்சரிதங்களையும் பெருமை நாகரிகம் முதலியவற்றையும் ஆராய்ந்துவெளியிடும் நோக்க முடையது. கொங்குமண்டலசதகம் முதலியவற்றை அச்சிட்டுவெளியிட்ட ஸ்ரீமான். தி. அ. முத்துஸாமிக்கோனாரவர்கள் இதன் ஆசிரியரானவர். இதிற் பலபுலவர்கள் தாம் ஆராய்ந்தறிந்தவற்றை எழுதி வெளியிடுவார்களென்று தெரிகிறது. இதன் முதற்பகுதியில் கொங்குமண்டல சரிதசம்பந்தமான சிலாசாசனங்களும் ஆராய்ச்சிகளும் வேறுபலவிஷயங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இதன் வருடச்சந்தா ரூபா இரண்டு. தனிப்பிரதி அணா நான்கு. வேண்டுவோர் பத்திராதிபர், கொங்குமண்டலம், திருச்செங்கோடு என்ற விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

கொங்குநாடன்:—இது, சுமாமங்கலம் உபாத்தியாயர் ஸ்ரீமத். ப. ஆறுமுகம்பிள்ளையவர்களைப்பத்திராசிரியராகவும், ஸ்ரீமத். சி. கு. நாராயணசாமிமுதலியாரவர்களை உதவிப்பத்திராதிபராகவும் பெற்று 8 பக்க அளவில் 56-பக்கமுடையதாக ஈரோட்டினின்று மாதமொருமுறைவெளிவருவது. இதில், கொங்குநாட்டின்பழஞ்சரிதஆராய்ச்சிக்குரிய கல்வெட்டுமுதலியனவும், நூலாராய்ச்சிகளும், கைத்தொழில், வியாபாரம், வியவசாய முதலியவற்றைப்பற்றிய விஷயங்களும், வர்த்தமானம் விகடம் நாவல் முதலியனவும் தக்கவர்களால் எழுதிவெளியிடப்படுமென்று தெரிகிறது. இதன் வருடச்சந்தா ரூ. இரண்டு. தனிப்பிரதி அணா மூன்று. வேண்டுவோர் ஊஞ்சலூர் K. S. வடிவேல்கவுண்டர், மானேஜர், கொங்குநாடன் கார்யாலயம், நிர். 142, கச்சேரிவீதி, ஈரோடு என்றவிலாசத்திற்பெறலாம்.

மற்றவன்றன் ராஜ்யவற்சரம் மூன்றாவது செலாநிற்ப
ஆங்கொருநாண்
மாடமா மதிற்கூடற் பாடுநீத்தவ ராக்குரோதிக்கக்
கொற்றவனே மற்றவரைத் தெற்றென நன்குகூவி
என்னேநுங் குறையென்று முன்னாகப் பணித்தருள
மேனாணின் குரவராற் பான்முறையின் வழுவாமை
மாகந்தோய் மலர்ச்சோலைப் பாகனூர்க் கூற்றத்துப்படுவது
ஆள்வதானை யடல்வேந்தே வேள்விகுடியென்னும் பெயருடை
ஒல்காத வேற்றானையோ டோதவேலி யுடன்காத்த [யது
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியெனும் பரமேசுவரனால்
வேள்விகுடி யென்னப்பட்டது கேள்வியிற் றரப்பட்டதனைத்
துளக்கமில்லாக் கடற்றானையாய் களப்பிரனா லிறக்கப்பட்டது
என்றுநின்றவன் விஞ்ஞாப்யஞ்செய்ய நன்றுநன்றென்று முறு
நாட்டானின் பழமையாதல் காட்டிநீ கேளென்ன [வலித்து
நாட்டிற்றன் பழைமையாதலைக் காட்டினனங் கப்பொழுதே
காட்ட, மேனாளை நங்குரவராற் பான்முறையிற் றரப்பட்டதை
எம்மாலுந் தரப்பட்டதென்று செம்மாந்தவ னெடுத்தருளி
விற்கைத்தடக்கை விறல்வேந்தன் கொற்கைகிழான் காமக்கணி
நற்சிங்கற்குத்
தேரோடுங் கடற்றானையா னீரோட்டிக் கொடுத்தமையின்
மற்றிதற்குப் பெருநான்கெல்லை தெற்றென விரித்துரைப்பிற்
புகாறுபொழின் மருங்குடுத்த நகரூரெல்லைக்கு மேக்கும்
மற்றிதற்குத் தென்னெல்லை [வடக்கும்
குளந்தைவங்கூழ் வந்தசைக்குங் களந்தைக்குளத்தி லாலுக்கு
மற்றிதற்கு மேலெல்லை யற்றமில்லாக் கொள்ளன்புத்தூரொடு
மையிருப்பைச் செய்யிடை மேற்றலைப்பொருப்பிற்குக் கிழக்கும்
மற்றிதற்கு வடபாலெல்லை
காயலுட்கமலமலரும் பாயலுள் வடபாலைப்பொருப்பிற்குத் தெற்
இவ்வியைந்த பெருநான் கெல்லையிற் பட்டபூமி [கும்
காராண்மை மீயாட்சி யுள்ளடங்க மேலெங்
குரவராற் கொடுக்கப்பட்டபரிசே யெம்மாலுங் கொடுக்கப்பட்டது
மற்றிதற் காணத்தி குற்றமின்றிக் கூறுங்காலைக்
கொங்கரவ நறுங்கண்ணிக் கங்கராசனது கன்யாரத்னம்
கொங்கர் கோற்குக் கொணர்ந்து கொடுப்ப

(889) செந்தமிழ்.

ஆர்வமரு வடற்றானைப் பூர்வராசர் புகன்றெழுந்து
வில்விரவுங் கடற்றானை வல்லவனை வெண்பைவாய்
ஆளமரு ளழிந்தோட வாளமரு ளுடன்வவ்விய
ஏனப்பொறி யிகலமரு ளிடியுருமென வலனேந்தி
மானத்தானை மதவீகலன் மன்னர்கோ னருளிற்பெற்றும்
கொல்வளைக்கும் வேற்றானைப் பல்வளைக்கோன் கொணரப்பட்டும்
பொரவந்தவர் மதந்தவிர்க்குங் கரவந்தவர் குலத்தோன்றல்
மாவேந்துங் கடற்றானை மூவேந்தமங்கலப் பேரரையனாகிய
வைத்யசிகாமணி மாறங்காரி—

## பராந்தகன்-நெடுஞ்சடையன்.

(சீரீவரமங்கல சாஸனப்பகுதி)

890. அன்ன னாகிய வலர்கதிர் நெடுவேற்
றென்னன் வானவன் செம்பியன் வடவரை
இருங்கய லாணை யொருங்குட னடாஅய்
ஒலிகெழு முந்நீ ருலகமுழு தளிக்கும்
வலிகெழு திணிதோண் மன்னவர் பெருமான்
தென்னல ராடி தேம்புனற் குறட்டிற்?
பொன்மலர்ப் புறவில் வெள்ளூர் விண்ணஞ்
செழியக் குடியென் றிவற்றுட் டெவ்வர்
அழியக் கொடுஞ்சிலை யன்றுகால் வளைத்தும்
மாயிரும் பெரும்புனற் காவிரி வடகரை
ஆயிர வேலி யயிரூர் தன்னிலும்
புகழி யூரிலுந் திகழ்வே லதியனை
ஓடுபுறங் கண்டவ னொலியுடை மணித்தேர்
ஆடல் வெம்மா வவையுடன் கவர்ந்தும்
பல்லவனுங் கேரளனு மாங்கவற்குப் பாங்காகிப்
பல்படையொடு பார்ஞெளியப் பவ்வமெனப் பரந்தெழுந்து
குடபாலுங் குணபாலு மணுகவந்து விட்டிருப்ப
வெல்படையொடு மேற்சென்றங்
கிருவரையு மிருபாலு மிடரெய்தப் படைவிடுத்துக் [போந்து
குடகொங்கத் தடன்மன்னனைக் கொல்களிற்றொடுங் கொண்டு
கொடியணிமணி நெடுமாடக் கூடன்மதி லகத்துவைத்தும்
கங்கபூமி யதனளவுங் கடிமுரசுதன் பெயரறையக்
கொங்கபூமி யடிப்படுத்துக் கொடுஞ்சிலைப்பூட் டிழிவித்துப்

---

(890) செந்தமிழ், தொ. 4, பக். 341—3.

பூஞ்சோலை யணிபுறவிற் காஞ்சிவாய்ப்பே ரூர்புக்குத்
திருமாலுக் கமர்ந்துறையக்
குன்ற மன்னதோர் கோயி லாக்கியும்
ஆழிமுந்நீ ரகழாக வகல்வானத் தகடுரிஞ்சும்
பாழிநீண்மதில் பரந்தோங்கிப் பகலவனு மகலவோடும்
அணியிலங்கையி னரணிதாகிய
மணியிலங்கு நெடுமாட மதில்விழிஞ மதுவழியக்
கொற்றவேலை யுறைநீக்கி வெற்றத்தானை வேண்மன்னனை
வென்றவன் விழுநிதியோடு குன்றமன்ன கொலைக்களிறுங்
கூந்தன்மாவுங் குலதனமு நன்றுடு மவைகொண்டும்
அரவிந்த முகத்திளைய ரரிநெடுங்க ணம்புகளாற்
பொரமைந்தர் புலம்பெய்தும் பொன்மாட நெடுவீதிக்
கரவந்தபுரம் பொலிவெய்தக் கண்ணகன்றதோர் கல்லகழொடு
விசும்புதோய்ந்து முகிறுஞ்சலி னசும்பறாத வகன்சென்னி
நெடுமதிலை வடிவமைத்தும்
ஏவமாதி விக்கிரமங்க ளொத்துணையோ பலசெய்து
மணிமாடக் கூடல்புக்கு மலர்மகளொடு வீற்றிருந்து
மனுதர்சித மார்க்கத்திறைற் குருசரிதங் கொண்டாடிக்
கண்டகசோதனை தான்செய்து கடன்ஞால முழுதளிக்கும்
பாண்டிய நாதன் பண்டித வத்ஸலன்
வீர புரோகன் விக்கிரம பாரகன்
பராந்தகன் பரம வைஷ்ணவன் றானாகி
நின்றிலங்கு மணிநீண்முடி நிலமன்னவ நெடுஞ்சடையற்கு
ராஜ்யவர்ஷம்—

(பழம்பாட்டு.)

891\. நாளை வரகுணர்கோ னுங்கையிலே தங்கலாம்
மீளு மமரும் விடிந்துபோம்—நீளமுமோர்
அம்பிட் டெயுந்தூர மவ்வூ ரயில்வேற்கட்
கொம்பிற்குங் காலாறக் கொண்டு.

---

(891) இறை. களவி. மேற்கோள்விளக்கம். (சென்னை மியூஸியம்பிரதி)

## இராசசிங்கபாண்டியன்.

### (சின்னமனூர்ச்சாஸனப்பகுதி).

[கௌஸ்துபத்தொடும்
892. திருவொடுந் தெள்ளமிர்தத்தொடுஞ் செங்கதிரொளிக்
அருவிமத களிற்றொன்றொடுந் தோன்றியர னவிர்சடைமுடி
வீற்றிருந்த வெண்டிங்கள் முதலாக வெளிப்பட்டது
நாற்றிசையோர் புகழ்தர நானிலத்தி னிலைபெற்றது
பாரத்துவா சாதிகளால் நேராக ஸ்துதிக்கப்பட்டது
விரவலர்க்கரியது மீனத்வயசாஸனத்தது
பொருவருஞ்சீ ரகத்தியனைப் புரோகிதனாகப் பெற்றது
ஊழியூழி தோறுமுள்ளது நின்றவொருவனை யுடையது
வாழியர் பாண்டியர் திருக்குலமிதனில் வந்துதோன்றி
வானவெல்லை வரைத்தாண்டும் வளைகடல்கடைந் தமிர்தங்கொண்
நானிலத்தோர் விஸ்மயப்பட நாற்கடலொரு பகலாடியும் [டும்
மங்கிலொளி மணிமுடியொடு சங்கவெள் வளைதரித்தும்
நிலவுலகம் வலஞ்செய்தும் நிகரில்வென்றி யமரர்க்குப்
பலமுறையுந் தூதுய்த்தும் பாகசாஸன னாரம்வவ்வியுஞ்
செம்மணிப்பூ ணொடுந்தோன்றித் தென்றமிழின் கரைகண்டும்
வெம்முனைவே லொன்றுவிட்டும் விரைவரவிற் கடனீட்டும்
பூழியனெனப் பெயரெய்தியும் போர்க்குன் றுயிரம்வீசியும்
பாழியம்பா யலினிமிர்ந்தும் பஞ்சவனெனப் பெயர்நிறீஇயும்
வளமதுரை நகர்கண்டும் மற்றதற்கு மதில்வகுத்தும்
உளமிக்க மதியதனா லொண்டமிழும் வடமொழியும்
பழுதறத்தா னாய்ந்து பண்டிதரின் மேந்தோன்றியும்
மாரதர்மலை களத்தவியப் பாரதத்திற் பகடோட்டியும்
விசயனை வசுசாபநீக்கியும் வேந்தழியச் சுரம்போக்கியும்
வசையில்மாக் கயல்புலிசிலை வடவரைநெற் றியில்வரைந்துந்
தடம்பூதம் பணிகொண்டு தடாகங்கள் பலதிருத்தியும்
அடும்பசிநோய் நாடகற்றி அம்பொற்சத் திரமுயர்த்தும்(?)
தலையாலங் கானத்திற் றன்னொக்கு மிருவேந்தரைக்
கொலைவாளிற் றலைதுமித்துக் குறைத்தலையின் கூத்தொழித்தும்
மகாபாரதந் தமிழ்ப்படுத்து மதுராபுரிச் சங்கம்வைத்தும்
மகாராசரும் சார்வபௌமரும் மகீமண்டலங் காத்திகந்தபின்
வில்லவனை நெல்வேலியிலும் விரிபொழிற் சங்கரமங்கைப்

(892) சாஸனம்; செந்தமிழ். தொ. 23, பக். 220—23.

பல்லவனையும் புறங்கண்ட பராந்தகன் பஞ்சவர்தோன்றலும்
மற்றவற்குப் பௌத்ரனாயின மன்னர்பிரா னிராசசிங்கனுங்
கொற்றவர்க டொழுகழற்காற் கோவரகுண மகாராசனும்
ஆங்கவற் காத்மசனாகி யவனிதலம் பொறைதாங்கித்
தேங்கமழ்பொழிற் குண்ணூரிலுஞ் சிங்களத்தும் விழிஞத்தும்
வாடாத வாகைசூடிக் கோடாதசெங் கோனடப்பக்
கொங்கலரும் பொழிற் குடமூக்கிற் போர்குறித்து
வந்தெதிர்ந்த கங்கபல்லவ சோளகாலிங்க மாகதாதிகள்
குருதிப்பெரும் புனற்குளிப்பக் கூர்வெங்கணை தொடைநெகிழ்த்
பருதியாற்ற லொடுவிளங்கின பரசக்கிர கோலாகலனுங் [துப்
குரைகழற்கா லரைசிறைஞ்சக் குவலயதலந் தனதாக்கின
வரைபுரையு மணிநெடுந்தோள் மன்னர்கோன் வரகுணவர்மனும்
மற்றவனுக் கிளையனான மனுசரிதன் வாட்சடையன்
பொற்றடம்பூண் சிரீபராந்தகன் புனைமணிப்பொன் முடிசூடிக்
கைந்நிலந்தோய் கரிகுலமும் வாசிவீருந்தமுங் காலாளும்
செந்நிலத்தி னிலஞ்சேரத் திண்சிலைவாய்க் கணைசிதறியும்
கரகிரியிற் கருதாதவர் வரகரிகுல நிரைவாரியும்
நிலம்பேர நகர்கடந்து நெடும்பெண்ணை கடமழித்தும்
ஆலும்போர்ப் பரியொன்றா லகன்கொங்கி லமர்கடந்தும்
தேவதானம் பலசெய்தும் பிரமதேயம் பலதிருத்தியும்
நாவலந்தீ வடிப்படுத்த நரபதியும் வானடைந்தபின்
வானவன்மா தேவியென்னு மலர்மடந்தை முன்பயந்த
மீனவர்கோ னிராசசிங்கன் விகடபா டலனவனே
அகிபதியா யிரந்தலையா லரிதாகப் பொறுக்கின்ற
மகிமண்டலப் பெரும்பொறைதன் மகாபுசபலத் தாற்றாங்கி
புஜகநாயக தரணிதாரண ஹரணராஜித புஜசுந்தரனாய்
உலப்பிலிமங் கலத்தெதிர்ந்த தெவ்வருட லுகுத்தசெந்நீர்
நிலப்பெண்ணிற் கங்கராக மெனநிலப் பரணிதந்தும்
மடைப்பகர்நீர்த் தஞ்சையர்கோன் தானைவரை வைப்பூரிற்
படைப்பரிசா ரந்தந்து போகத்தன் பணைமுழக்கியுங்
கொடும்பைமா நகர்நிறைந்த குரைகடற் பெருந்தானை
இடும்பையுற் றிரியத்த னிரணோதய மேற்கொண்டும்
புனற்பொன்னி வடகரையிற் பொழில்புடைசூழ் மதில்வஞ்சி
கனற்படவிழித் தெதிர்ந்தவீரர் கவந்தமாடக் கண்சிவந்துஞ்
சேவலுயர் கொடிக்குமர னெனச்சீறித் தென்றஞ்சை

காவலனது கரிதுரக பதாதிசங்கங் களத்தவியப்
பூம்புனனு வற்பதியில் வாம்புரவி வலங்காட்டியும்
விசயஸ்தம்பம் விசும்பணவச் செங்கோற்றிசை விளிம்பணவக்
குசைமாவுங் கொலைக்குன்றமுங் குருதியாரமுங்கொணர்ந்தும்
மகுடவர்த்தன ரடிவணங்க மகேந்திரபோக மனுபவித்த
விகடபாடலன் ஸ்ரீகாந்தன் மீநாங்கித சைலேந்திரன்
ராஜசிகா மணிதென்னன் ராஜிதகுண கணநங்கோன்
எண்ணிறந்த பிரமதேயமு மெண்ணிறந்த தேவதானமும்
எண்ணிறந்த பள்ளிச்சந்தமு மெதிரிசையு மினிதியற்றி
உலப்பிலோத வொலிகடல்போ லொருங்குமுன்னந் தானமைத்த
இராசசிங்கப் பெருங்குளக்கீழ்ச் சூழுநக ரிருந்தருளி
ராஜ்யவர்ஷ மிரண்டாவதி னெதிர்பதினுன் காம்யாண்டில்—

**பொய்யாமொழிப்புலவர் பாண்டியன்வாசலிற்போய்ப் பாதி வசையும் பாதி நகையுமாகப் பாடிய கலித்துறை.**

893. குழற்கா லரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கான் மதியமன் றேநின் றிருக்குல நீயவன்றன்
அழற்கா [1]லவிர்சடை மீதே யிருந்துமவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே.

**பராந்தகபாண்டியன்.**

894. கோலெடுத்துக் கோத்துரத்துங் கோகனகச் செங்கைவடி
வேலெடுத்துங் கோத்துரத்தல் விட்டிலனே—[2]சால்படுத்த
பூபால னுனும் போமோ [3]பராந்தகற்குக்
கோபால னை குணம்.

**பராந்தகபாண்டியன் மெய்க்கீர்த்தி.**

895. திருவளரச் செயம்வளரத் தென்னவர்தங் குலம்வளர
அருமறைநான் கவைவளர வனைத்துலகுந் துயர்நீங்கத்
தென்மதுரா புரித்தோன்றித் தேவேந்திரனொ டினிதிருந்த
மன்னர்பிரான் வழுதியர்கோன் வடிம்பலம்ப நின்றருளி
மால்கடலை யெறிந்தருளி மலையத்துக் கயல்பொறித்துச்
சேரலனைச் செருவில்வென்று திறைகொண்டு வாகைசூடிக்
கூபகர்கோன் மகட்கொடுப்பக் குலவிழினுங் கைக்கொண்டு
கன்னிப்போர் செய்தருளிக் காந்தளூர்ச்சாலை கலமறுத்து
மன்னுபுகழ் மறையவர்த மணியம்பலத் தினிதிருந்து

---

(893) தமிழ்நா. 63. [1]லொளிர்சடை. (894) தனிப்பா. [2]சீலமிகு. [3]புராதனத்தில். (895) T. A. S. ii, 4.

ஆயிரத் தெண்ம ரவிரோதப் பணிப்பணியால்
பறைபேர்த்துக் கன்ஞட்டிப் பண்டுள்ள பேர்தவிர்த்து
அளப்பனவுநிறுப்பனவுங் கயலெழுதி யனந்தபுரத் தெம்மாற்கு
நிலவியபொன் மணிவிளக்கு நின்றெரியப் பத்தமைத்து[1]

* * * *

தைப்பூசப் பிற்றைஞான்று
வந்திருந்தா ரெல்லார்க்கு மாற்றுதே தியாகமிட
அறத்தால் விளங்கிய வாய்ந்த கேள்விப்
புறத்தாய நாடு பூமகட் களித்துத்
தெலிங்கவீமன் குளங்கொண்டு தென்கலிங்க மடிப்படுத்துத்
திசையனைத்து முடனாண்ட சிரீபராந்தகதேவர்க்கு யாண்டு—

### வீரபாண்டியன் மெய்க்கீர்த்தி.

896. பூமடந்தையுஞ் சயமடந்தையும் பொலிந்துதிருப் புயத்திருப்பப்
பார்முழுதுங் குடைநிழற்றப் பராக்கிரமத்தான் முடிசூடித்
தென்மது ராபுரித் திருவிளையாட் டத்திற்கண்டு
மன்னரெல்லாம் வந்திறைஞ்ச மலைநாடு கொண்டருளி
மாபா ரதம்பொருது மன்னவர்க்குத் தூதுசென்று
தேவாசுர மதுகைதரித்துத் தேஞருமறை(?)யுங் கொண்டருளி
வடவரையிற் கயல்பொறித்து வானவர்கோ ஞரம்பூண்டு
திடவாசகக் குறுமுனிபாற் செந்தமிழ்நூல் தெரிந்தருளி[2]
செங்கோ லெங்குந் திசையுற நடாத்தி
மன்னிய வீர சிம்மா சனத்தில்
திரைலோக்யமுழு துடையாளொடும் வீற்றிருந் தருளி
மாமுதன் மதிக்குலம்விளக்கிய கோமுதற் கொற்றவன்மரான
திரிபுவனசக்கரவர்த்திகள் சிரீவீரபாண்டியதேவர்—

### சடாவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி.

897. பூமலர்வளர் திகழ்திருமகள் புகழாகம் புணர்ந்திருப்ப
நாமலர்வளர் கலைவஞ்சி நலமிகுமா மனத்துறையச்
சிமையவரைத் திறன்மடந்தை திருத்தோளின் மிசைவாழ
விமையவர்கோ னன்றிட்ட வெழிலாரங் கழுத்திலங்கப்

---

[1]ஆங்கமைத்த தாயநல்லூர், அடதென் ஞட்டரையனென வறிவகையா லறிந்துணர்ந்து, தென்னவர்தங் குலதெய்வந்தென்குமரிகன்....திருநாள் விழாவதனிற்(?) (896) T. A. S. ii, 19. [2]தளிருங் கைத்த மாதரிமை (?) (897) செந்தமிழ், தொ-4. பக். 514—

பகிரதிபோற் றுய்யபுகழ்ப் படர்வல்லி கொழுந்தோட்டத்
திகிரிவரைக் கப்புறத்துச் செழுந்திகிரி சென்றுலவத்
தண்டரள மணிக்கவிகை தெண்டிரைசூழ் பார்நிழற்ற
வெங்கோபக் கலிகடிந்து செங்கோலெண் டிசைநடப்பச்
செம்முரசின் முகில்முழங்கச் சிலையகன்று விசும்படையத்
திறற்புலிபோய் வனமடையக்
கயலிரண்டு நெடுஞ்சிகரக் கனவரையின் விளையாட
வொருமைமனத் திருபிறப்பின் முத்தீயின் நால்வேதத்
தருமறையோ ரைவேள்வி யாறங்க முடன்சிறப்ப
வருந்தமிழு மாரியமு மறுசமயத் தறநெறியுந்
திருந்துகின்ற மனுநெறியுந் திறம்பாது தழைத்தோங்கக்
குச்சரரு மாரியரும் கோசலருங் கொங்கணரும்
வச்சிரருஞ் சோனகரும் வந்தியரு முதலாய
விருநிலமா முடிவேந்த ரிறைஞ்சிநின்று திறைகாட்ட
வடிநெடு வாளும் வயப்பெரும் புரவியுந்
தொடிநெடுந் தோளுமே துணையெனச் சென்று
சேரனுந் தானையுஞ் செருக்களத் தொழிய
வாரசும் புலரா மலைநாடு நூறப்
பருமா மரபிற் பொருதிறல் மிக்க
சென்னியைத் திறைகொண்டு திண்டோள் வலியிற்
பொன்னி நாட்டுப் போசலத் தரைசர்
களப்புரி......டைத்துப் பொங்கு வீரப்புரவியுஞ்
செருவிற லாண்மைச் சிங்கணன் முதலாய
தண்டத் தலைவருந் தானையு மழிபடத்
துண்டித் தளவில் சோரி வெங்கலிப்
பெரும்பிணக் குன்ற மிருங்கன் னிறைத்துப்
பருந்துங் காகமும் பாறுங்.....................
அருந்தி மகிழ்ந்தாங் கமர்க்கள மெடுப்பக்
குழையுந் திகழ்கதிர் மணியு மடந்தைய
ரார மார்பு முடன்கவர்ந் தருளி
முதுகிடு போசளன் றன்னொடு முனையுமது
தவறென் றன்னை பொற் பெற்றிட..... ...தி
போலுட் பகையாய்நின்ற
சேரனைக் கொன்று சினந்தணிந் தருளி
கண்ணுதல் பிறரா லெண்ணுதற் கரிய
கன்னனூர்க் கொப்பத்தைக் கைக்கொண் டருளிப்

பொன்னி சூழ்செல் வப்புன னாட்டைக்
கன்னி நாடெனக் காத்தருள் செய்யப்
பெருவரை யானிற் (?) பின்னகருக் காக்கிய
கருநட ராசனைக் களிறுதிறை கொண்டு
துலங்கொளி மணியுஞ் சூழி வேழமு
மிலங்கை காவலனை யிறைகொண் டருளி
வருதிறை மறுத்தங் கவனைப் பிடித்துக்
கருமுகில் நிகளங் காலிற் கோத்து
வேந்தர்கண் டறியா விறற்றிண் புரிசைச்
**சேந்த மங்கலச் செழும்பதி முற்றிப்**
பல்லவ னடங்கப் பலபோ ராடி
நெல்லிலை நாடு நெடும்பெரும் பொன்னும்
பருமயானையும் பரியு முதலிய
வரசுரிமை கைக்கொண் டரசவற் களித்துத்
தில்லையம் பலத்துத் திருநடம் பயிலுந்
தொல்லை யிறைவர் துணைக்கழல் வணங்கிக்
குளிர்பொழில் புடைசூழ் **கோழிமான் காளி**
(நனி)செறி வேம்பினணிமலர் கலந்த
தொங்கல் வாகைத் தொடைகள் சூட்டித்
திங்களுயர் மரபு திகழவந் திருந்த
தன்.........சையா னன்னிலை விஜயம்
(எண்ணருங்) கலைதே ரின்மொழிப் பாவலர்
மண்ணின்மே லூழி வாழ்கென (வாழ்)த்தக்
கண்டவர் மனமுங் கண்ணுங் களிப்ப
வெண்டிரை மகர வேலையி னெடுவரை
யாயிரம் பணைப்பணத் தனந்தன் மீமிசைப்
பாயல் கொள்ளும் பரமஞ்.........கத்
தொருபெருங் கடவு ளுவந்தினி துறையு
மிருபெருங் காவிரி யிடைநிலத் திலங்குந்
திருவரங் கம்பெருஞ் செல்வம் சிறப்பப்
பன்முறை யணிதுலா பார மேறிப்
பொன்மலை யென்னப் பொலிந்து தோன்றவும்
**பொன்வேய்ந் தருளிய** செம்பொற் கோயிலுள்
ளொர்திகழ் மாஅ லுதைய வெற்பெனத்
திருவளர் குலமணிச் சிங்கா சனமிசை

மரகத மலையென மகிழ்ந்தினி தேறித்
தினகரோ தயமெனச் செழுங்கதிர் சொரியும்
கனக மாமுடி கவின்பெறச் சூடிப்
பாராள் வேந்த ருரிமை யரிவைய
ரிருமருங்கு நின்று விரிபெருங் கவரியின்
மந்த வாடையு மலையத் தென்றலு
மந்தளிர்க் கரங்கொண் டசைய வீச
ஒருபொழு தும்விடா துடனிருந்து மகிழும்
திருமக ளென்னத் திருத்தோள் மேவி
யொத்த முடிசூடி யுயர்பே ராணை
திக்கெட்டும் நடப்பச் செழுந்தவஞ் செய்த

* * *

உலகுமுழுது முடையாளொடும் வீற்றிருந் தருளிய
ஸ்ரீகோச்சடை வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு—

898. வாழ்க கோயில்பொன் வேய்ந்த மகிபதி
வாழ்க செந்தமிழ் மாலை தெரிந்தவன்
வாழ்க மண்டலம் யாவையுங் கொண்டவன்
வாழ்க சுந்தர மன்னவன் தென்னனே.

**(சுந்தரபாண்டியன் தில்லையில் துலாபாரஞ் செய்தது.)**

899. இனவரிக் கிம்புரி வெண்பிறைக் கோட்டிகல் வெங்கடுங்கட்
சினமத்த வெங்கரிச் சுந்தரத் தென்னவன் றில்லைமன்றில்
வனசத் திருவுடன் செஞ்சொற் றிருவை மணந்தெதாக்கும்
கனகத் துலையுடன் முத்தத் துலையிற் கலந்ததுவே.

**(சுந்தரபாண்டியன்செய்த போர்.)**

900. வட்ட வெண்குடை மன்னர் தம்புகல்
கொண்டு மாமுடி கொண்டுபோர்
மாறு கொண்டெழு போச ளன்றடை
கொண்டு வாணன் வனம்புகத்
தொட்ட வெம்படை வீரன் வென்றி
புனைந்த சுந்தர மாறன்முன்

---

(898) திருப்புட்குழி விஜயராகவப்பெருமான்கோயில் மகாமண்டபத்துக் கீழ்ப்பக்கத்துக்கண்ட சாஸனப்பகுதி. (செந்தமிழ். தொ-4, பக். 514-16,) (899) S. I. I, iv, p. 189; செந்தமிழ். தொ-4, பக், 491,

சூழ விட்ட தெலிங்கர் சேனை
துணித்து வென்றவெங் களத்துமேல்
விட்ட வெம்பரி பட்ட போதெழு
சோரி வாரியை யொக்குநேர்
மேன்மி தந்தனி னைப்பெ ருந்திரள்
வெண்ணு ரைத்திர ளொக்குமுன்
பட்ட வெங்கரி யந்த வாரி
படிந்த மாமுகி லொக்கும்வீழ்
பருமணிக்குடை யங்கு வந்தெழு
பருதி மண்டில மொக்குமே.

901. காரேற்ற தண்டலைக் காவிரி நாட்டைக் கானுலவுந்
தேரேற்றி விட்ட செழுந்தமிழ்த் தென்னவன் சென்றெதிர்ந்து
தாரேற்ற வெம்படை யாரியர் தண்டு படத்தனியே
போரேற்று நின்ற பெருவார்த்தை யின்னும் புதுவார்த்தையே.

902. பண்பட்ட மென்மொழிப் பைந்தொடி கொங்கை பரக்கவைவேற்
கண்பட்ட முத்த வடங்கண்டுங் காக்கிலன் காடவர்கோன்
எண்பட்ட சேனை யெதிர்பட் டொழுக வெழுந்தபுண்ணார்
விண்பட் டலையப் படைதொட்ட சுந்தர மீனவனே.

903. மீளா வழிசெல்ல வேணாடர் தங்களை வென்றதடந்
தோளான் மதுரைமன் சுந்தர பாண்டியன் சூழ்ந்திறைஞ்சி
யாளான மன்னவர் தன்னேவல் செய்ய வவனிமுட்ட
வாளால் வழிதிறந் தான்வட வேந்தரை மார்திறந்தே.

904. கொங்க ருடல்கிழியக் குத்திரு கோட்டெடுத்து
வெங்க ணழலில் வெதுப்புமே—மங்கையர்கண்
சூழத்தா மம்புனையுஞ் சுந்தரத்தோண் மீனவனுக்
கீழத்தா னிட்ட விறை.

905. வாக்கியல் செந்தமிழ்ச் சுந்தர பாண்டியன் வானமரில்
வீக்கிய வன்கழற் கண்டகோ பாலனை விண்ணுலகிற்
போக்கிய பின்பவன் தம்பியர் போற்றப் புரந்தரசி
லாக்கிய வார்த்தை பதினு லுலகமு மாகியதே.

---

(900—902) S. I. I. iv, No. 618-620; செந்தமிழ், iv, பக். 491-492.
(903—905) செந்தமிழ், iv, பக். 493.

### கோமாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி 1.

906. பூமருவிய திருமடந்தையும் புவிமடந்தையும் புயத்திருப்ப
நாமருவிய கலைமடந்தையுஞ் சயமடந்தையு நலஞ்சிறப்பக்
கோளார்ந்த சினப்புலியுங் கொடுஞ்சிலையுங் குலைந்தொளிப்ப
வாளார்ந்த பொற்கிரிமேல் வரிக்கயல்கள் விளையாட
இருங்கடல் வலயத் தினிதறம் பெருகக்
கருங்கலி கடிந்து செங்கோல் நடப்ப
ஒருகுடை நீழ லிருநிலங் குளிர
மூவகைத் தமிழு முறைமையின் விளங்க
நால்வகை வேதமு நவின்றுடன் வளர
ஐவகை வேள்வியுஞ் செய்வினை யியற்ற
அறுவகைச் சமயமு மழகுடன் றிகழ
எழுவகைப் பாடலு மியலுடன் பரவ
எண்டிசை யளவுஞ் சக்கரஞ் செல்லக்
கொங்கணர் கலிங்கர் கோசலர் மாளுவர்
சிங்களர் தெலிங்கர் சீனர் குச்சரர்
வில்லவர் மாகதர் விச்சலர் செம்பியர்
பல்லவர் முதலிய பார்த்திவ ரெல்லாம்
உறைவிட மருளென வொருவர்மு னொருவர்
முறைமுறை கடவதந் திறைகொணர்ந் திறைஞ்ச
இலங்கொளி மணிமுடி யிந்திரன் பூட்டிய
பொலங்கதி ரார மார்பினிற் பொலியப்
பனிமலர்த் தாமரைத் திசைமுகன் படைத்த
மனுநெறி தழைப்ப மணிமுடி சூடிப்
பொன்னிசூழ் நாட்டிற் புலியாணை போயகலக்
கன்னிசூழ் நாட்டிற் கயலாணை கைவளர
வெஞ்சின விவுளியும் வேழமும் பரப்பித்
தஞ்சையு முறந்தையுஞ் செந்தழல் கொளுத்திக்
காவியு நீலமு நின்று கவினிழப்ப
வாவியு மாறு மணிநீர் நலனழித்துக்
கூடமு மாமதிலுங் கோபுரமு மாடரங்கும்
மாடமு மாளிகையு மண்டபமும் பலவிடித்துத்
தொழுதுவந் தடையா நிருபர்தந் தோகையர்
அழுத கண்ணீ ராறு பரப்பிக்

---

(906) S. I. I IV. p. 108—9.

கழுதைகொண் டுழுது கவடி வித்திச்
செம்பியனைச் சினமிரியப் பொருதுசுரம் புகவோட்டிப்
பைம்பொன் முடிபறித்துப் பாணனுக்குக் கொடுத்தருளிப்
பாடருஞ் சிறப்பிற் பருதி வான்றோய்
ஆடகப் புரிசை யாயிரத் தளியிற்
சோழ வளவ னபிஷேக மண்டபத்து
வீராபி ஷேகஞ் செய்து புகழ்விரித்து
நாளும் பரராசர் நாமத் தலைபிடுங்கி
மீளுந் தறுகண் மதயானை மேற்கொண்டு
நீராழி வைய முழுதும் பொதுவொழித்துக்
கூராழியுஞ் செய்ய தோளுமே கொண்டுபோய்
ஐயப் படாத வருமறைதே ரந்தணர்வாழ்
தெய்வப் புலியூர்த் திருவெல்லை யுட்புக்குப்
பொன்னம் பலம்பொலிய வாடுவார் பூவையுடன்
மன்னுந் திருமேனி கண்டு மனங்களித்துக்
கோல மலர்மே லயனுங் குளிர்துழாய்
மாலு மறியா மலர்ச்சே வடிவணங்கி
வாங்குசிறை யன்னந் துயிலொழிய வண்டெழுப்பும்
பூங்கமல வாவிசூழ் பொன்னம ராவதியில்
ஒத்துலகந் தாங்கு முயர்மேருவைக் கொணர்ந்து
வைத்தனைய சோதி மணிமண் டபத்திருந்து
சோலை மலிபழனச் சோணாடுந் தானிழந்த
மாலை முடியுந் தரவருக வென்றழைப்ப
மான நிலைகுலைய வாழ்நகரிக் கப்புறத்துப்
போன வளவ னுரிமை யொடும்புகுந்து
பெற்ற புதல்வனைநின் பேரென்று முன்காட்டி
வெற்றி யரியணைக்கீழ் வீழ்ந்து தொழுதிரப்ப
தானோடி முன்னிகழ்ந்த தன்மையெலாங் கையகலத்
தானே தகம்பண்ணித் தண்டார் முடியுடனே
விட்ட புகலிடத்தன் மாளிகைக் குத்திரிய
விட்டபடிக் கென்று மிதுபிடிபா டாகவெனப்
பொங்குதிரை ஞாலத்துப் பூபாலர் தோள்விளங்குஞ்
செங்கயல்கொண் டென்றுந் திருமுகமும் பண்டிழந்த
சோள பதியென்னு நாமமுந் தொன்னகரும்
மீள வழங்கி விடைகொடுத்து விட்டருளி

வாகைக் கதிர்வேல் வடவேந்தர் தம்பாதம்
மேகத் தளையணிய வீரக் கழலணிந்து
விளங்கிய மணியணி வீரசிம் மாசனத்து
வளங்கெழு கவரி யிருமருங் கசைப்பக்
கடலென முழங்குங் களிநல் யானை
வடபுல வேந்தர் மணிப்புயம் பிரியா
இலகுகுழை யரிவையர் தொழுதுநின் றேத்தும்
உலகமுழு துடையாளொடும் வீற்றிருந் தருளிய
கோமாற வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
சோனாடு வழங்கி யருளிய
ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு—

மேற்படி சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி.—2.

907. பூமலர்த் திருவும் பொருசய மடந்தையும்
தாமரைக் குவிமுலை சேரப்புயத் திருப்ப
வேத நாவின் வெள்ளிதட் டாமரைக்
காதன் மாது கவின்பெறத் திளைப்ப
வெண்டிரை யுடுத்த மண்டிணி கிடக்கைத்
திருநில மடந்தை யுரிமையிற் களிப்பச்
சமயமு நீதியுந் தருமமுந் தழைப்ப
இமையவர் விழாக்கொடி யிடந்தொறு மெடுப்பக்
கருங்கலிக் கனல்கெடக் கடவுள் வேதியர்
அருந்தொழில் வேள்விச் செங்கனல் வளர்ப்பச்
சுருதியுந் தமிழுந் தொல்வளங் குலவப்
பொருதிற லாழி பூதலஞ் சூழ்வர
ஒருகை யிருசெவி மும்மத நாற்கோட்
டயிரா வதமுதற் செயிர்தீர் கொற்றத்
தெண்டிசை யானை யெருத்த மேறிக்
கோசலந் துளுவங் குகிரங் குச்சரம்
போசல மகதம் பொப்பளம் புண்டரம்
கலிங்க மீழங் கடாரங் கவுடம்
தெலிங்கஞ் சோனகஞ் சீன முதலா
விதிமுறை திகழ வெவ்வேறு வகுத்த
முதுநிலக் கிழமையின் முடிபுனை வேந்தர்க்
கொருதனி நாயக னென்றுல கேத்தத்

(907) சாஸனம்.

திருமுடி சூடிச் செங்கோ லோச்சிக்
கொற்றத் தரளக் குளிர்குடை நீழற்
கற்றைக் கவரி காவலர் வீச
மிடைகதிர் நவமணி வீரசிங் காதனத்
துடன்முடி சூடி யுயர்குலத் திருவெனப்
பங்கய மலர்க்கரங் குவித்துப் பார்த்திவர்
மங்கையர் திரண்டு வணங்குஞ் சென்னிச்
சுடரொளி மவுலிச் சூடா மணிமிசைச்
சிவந்த விணைமலர்ச் சீறடி மதுகரம்
கமலமென் றணுகு முலகமுழு துடையாளொடு
வீற்றிருந்தருளிய
மாமுதன் மதிக்குலம்விளக்கிய கோமுதற் கோமாறவன்மரான
திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு
யாண்டு—

**சுந்தரபாண்டியன் செய்த கோபுரத்திருப்பணி.**

908. சந்திர சேகரர் தென்மது ரேசர்தஞ் சந்நிதியில்
வந்தொரு கோபுர மாமக மேரு வளர்ந்ததெனச்
சுந்தர பாண்டியன் கோபுரமொன்று இலங்கச் செய்தான்
மந்தர நேர்புயன் சுந்தர பாண்டிய மன்னவனே.

**குலசேகரபாண்டியன்.**

909. உடைய சிவன்புதல்வ னுக்கிரனுக் கப்பால்
அடையுமுடி யையெட்டி லக்கத்—துடைய றுபத்
தையா யிரத்தறுநூற் றைம்பதின் மேலழகன்
கைவேற் குலசே கரன்.

**குலசேகரபாண்டியனது வேப்பத்தூர்த்தானம்.**

910. தனக்கொருபத் தேழு கலிக்கொருபத் தாறு
புனக்குடுமிக் கோமான் புதல்வன்—மனக்கினிய
தென்னிம்பை யூரதனைச் சீர்மறையோ ருக்களித்தான்
கன்னன் குலசே கரன்.

**கோமாறவர்மன் குலசேகரபாண்டியன் மெய்க்கீர்த்தி.**

911. தேர்போ லல்குற் றிருமகள் புணரவும்
கார்சேர் கூந்தற் கலைமகள் கலப்பவும்

---

(908) மதுரைத்திருப்பணிமாலை. 7. (909) செந்தமிழ், iv, பக். 690. (910) திருவாலவாயுடையார் திருவிளையாடல், பெரும்பற்றப்புலியூர் நம்பி வரலாறு. (911) சாஸனம்.

பார்மகள் மனத்துப் பாங்குட னிருப்பவும்
செங்கோ னடப்பவும் வெண்குடை நிழற்றவும்
கருங்கலி முருங்கவும் பெரும்புகழ் விளங்கவும்
கானிலை செம்பியன் கடுப்புலி யாளவும்
மீனம் பொன்வரை மேருவி லோங்கவும்
முத்தமிழு மனுநூலு நான்மறை முழுவதும்
எத்தவச் சமயமு மினிதுடன் விளங்கவும்
சிங்கணங் கலிங்கந் தெலிங்கஞ் சேதிபம்
கொங்கணங் குதிரம் போசளங் குச்சளம்
முறைமையி னுளுமுதநில வேந்தர்
திறைமுறை காட்டிச் சேவடி வணங்க
மன்னர் மாதர் பொன்னணி கவரி
இருபுடை மருங்கு மொருபடி யிரட்டப்
பழுதறு சிறப்பிற் செழுவை காவலன்
வீரசிங் காதனத் தோராங் கிருந்தே
யாரும் வேப்பு மணியிதழ் புடையாத்
தாருஞ் சூழ்ந்த தடமணி மகுடம்
பன்னூ றாழி தொன்னிலம் புரந்து
வாழ்கென ...... மகிழ்ந்துடன் சூடி
அலைமகள் முதலா மரிவையர் பரவ
உலகமுழு துடையா ளொடும்வீற்றிருந் தருளின
கோமாற வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீ குலசேகர தேவர்க்கு யாண்டு.—

912. கொத்தலருந் தாரான் குலசே கரன்கூடற்
பத்தி யிளங்கமுகின் பாளைதொ றுந்—தத்திவரும்
தாளஞ் சுகமே தலைவர் நமைப்பிரிந்தால்
நாளஞ் சுகமே நமக்கு.

913. பூதம்பணி கொண்டாய்கடல் பாதந்தொழ நின்றாய்
புயலைத்தளை யிட்டாய்கயல் பொற்குன்று பொறித்தாய்
மூதண்டபு ரேசன்கதிர் முடிசிந்த முனிந்தாய்
மூரிச்சிலை வேளாண்மை முடிக்குந்திற மறிதோ
வேதண்டமொ ரெட்டுங்கிளர் வேழங்களொ ரெட்டும்
விடநாகமு முடனேந்த விழாமற்புவி யாளும்
கோதண்ட முகுந்தாவர குலசேகர மாறா
கூடற்பதி யிறைவாவுயர் கொற்கைப்பெரு மானே.

(912, 913) தஞ்சைச் சரசுவதிமால் பிரதி.